பக்கங்கள்:10 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 தை 21 வியாழக்கிழமை 03.02.2022 கதிர் 90

### இனி அது ரகசியம் அல்ல!

பதின்மூன்றாவது திருத்தத்துக்குள் தமிழரின் இனப்பிரச்சினைத் தீர்வை முடக்கும் முயற்சிக்கு எதிரான நடவடிக்கை என்ற பெயரில் கடந்த முப்பதாம் திகதி கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ☞2

## பருத்தித்துறை பிரதேச செயலகம் மீனவர்களால் முற்றுகை!

பருத்தித்துறை பிரதேச செயலகத்தை முற்றுகையிட்டு மீனவர்கள் நேற்று போராட்டத்தை முன்னெடுத்தனர்.

அண்மையில் வத்திராயன் பகுதியில் இருந்து மீன்பிடிக்கச் சென்ற இரண்டு மீனவர்களின் உயிரிழப்புக்கு நீதி கோரியும், இந்திய மீனவர்களின் அத்துமீறலுக்கு எதிராகவும் இந்தப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது பிரதேச செயலகத்தின் இரண்டு வாசல்களையும் முடக்கி அதற்கு முன்பாக அமர்ந்திருந்து மீனவர்கள் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இதனால் பிரதேச செயலகத்தின் நேற்றைய செயற்பாடுகள் யாவும் பாதிக்கப்பட்டன.

அத்தோடு யாழ்ப்பாணம் – பருத்தித்துறை பிரதான வீதியையும் மறித்து ☞2



# ஸ்ரீலங்காவின் சுதந்திர நாள் தமிழ்த் தேசத்தின் கரிநாள்!



## முள்ளிவாய்க்கால் மண்ணில் நாளை மாபெரும் போராட்டத்துக்கு அழைப்பு

'ஸ்ரீலங்காவின் சுதந்திர நாள் தமிழ்த் தேசத்தின் கரிநாள்!' எனும் தொனிப்பொருளில் நாளை முள்ளிவாய்க்காலில் மாபெரும் போராட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

வடக்கு – கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், வடக்கு – கிழக்கு சிவில் சமூக அமைப்பினர் மற்றும் பாதிக்கப்பட்ட தரப்பினர் அனைவரும் ஒன்றிணைந்து இந்தப் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளனர். ☞2

## சு.க. தலைமையில் புதிய ஆட்சி

### மக்களின் விருப்பம் இதுவே என்கிறார் மைத்திரி

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையில் ஆட்சி அமைய வேண்டும் என மக்கள் விரும்புகின்றனர். சுதந்திரக் கட்சிக்கான கேள்வியும் தற்போது மக்கள் மத்தியில் அதிகரித்து வருகின்றது.

– இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

எமது கட்சியைப் பலப்படுத்துவதற்கான ☞2



## எரிபொருள் விலை மேலும் எகிறுமா?

### இல்லை என்கிறார் பஸில்



எரிபொருள் விலையை மேலும் அதிகரிப்பதற்கான எண்ணம் தற்போது இல்லை என்று நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ நேற்று ஊடகங்களிடம் தெரிவித்தார். ☞2

## 19 பேர் மரணம்

இலங்கையில் மேலும் 19 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் மரணித்துள்ளனர்.

உயிரிழந்தவர்களில் 14 ஆண்களும், 5 பெண்களும் அடங்குக்கின்றனர்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால் நேற்று முன்தினம் இந்த மரணங்கள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன ☞2



வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா நேற்று கொழும்பில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை மரியாதையின் நிமித்தம் சந்தித்தார். அப்போது எடுக்கப்பட்ட படம்.

## யாழில் செய்தியாளரை தாக்கிய நபர் சிக்கினார்

யாழ்.சாவகச்சேரியில் ஊடகவியலாளரைத் தாக்கி உயிர் அச்சுறுத்தல் விடுத்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் ஒருவர் நேற்று கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டார்.

கடந்த 31ஆம் திகதி மதியம் கடமை முடித்து சாவகச்சேரி – கச்சாய் வீதியால் வீடு ☞2

## யாழ்.மாவட்ட செயலகத்தை முடக்கி மீனவர்கள் இன்று பெரும் போராட்டம்

யாழ்ப்பாணம் மாவட்ட செயலகம் மற்றும் ஏ – 9 வீதியை முடக்கி இன்று போராட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது என யாழ். மாவட்ட மீனவர்கள் தெரிவித்தனர்.

இந்திய மீன்வர்களின் அத்துமீறலைக் கண்டித்து 3 நாள்களாகத் தொடர்ச்சியாகப் போராடி வரும் யாழ். மாவட்ட மீனவர்களுக்கு உரிய தீர்வு இதுவரை கிடைக்காத நிலையில் அவர்கள் இன்று மாவட்ட செயலகத்தை முற்றுகையிடும் போராட்டத்தை மேற்கொள்ளவுள்ளனர்.

அத்துடன் நாளை இலங்கையின் சுதந்திர தினத்தில் தேசியக் கொடியை ஏற்ற விடாமல் போராட்டம் கடுமையாக இருக்கும் எனவும் யாழ். மாவட்ட மீனவர்கள் எச்சரித்தனர்.

Since 2014
அருந்ததி
இணைய திருமண சேவை
28.02.2022 வரை
இலவசப்பதிவுகளை
மேற்கொள்ளமுடியும்
+94777164524
www.arunthathee.com
18, ராமகிருஸ்ணா அவினியு, வெள்ளவத்தை
20 கே.கே.எஸ் வீதி கொக்குவில்

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஏற்பாடு செய்து முன்னெடுத்த போராட்டம் வெற்றியா, தோல்வியா என்ற விமர்சனங்கள் புலம்பெயர் தேசம் எங்கும் பரபரப்பாகத் தொடர்கின்றன.

அது வெற்றியா, தோல்வியா என்பது வேறு விடயம். ஆனால் தமிழர்கள் மத்தியில் – களத்திலும் புலம்பெயர் தேசங்களிலும் – அது பலத்த அரசியல் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருக்கின்றது என்பது மட்டும் உண்மை.

இந்த அருமையான களநிலை வாய்ப்பை ஏற்படுத்தித் தந்தமைக்காக ரெலோ பிரகிருதிகளுக்கு கஜேந்திரர்கள் நன்றி சொல்ல வேண்டும் என்று நினைக்கிறேன். தமிழ்த் தேசியப் பரப்பில் நின்ற தமிழ்க் கட்சிகளை எல்லாம் இழுத்து வந்து ஒரு பக்கத்தில் நிறுத்தி, ஒரு கோட்டை வரைந்து, இந்தப் பக்கம் எங்களுக்கு, அந்தப் பக்கம் உங்களுக்கு என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கு அரசியல் சித்து விளையாட்டு நடத்துவதற்கான மைதானத்தை 'கிளியர்' பண்ணிக் கொடுத்தமையின் சூத்திரதாரிகள் அந்தப் பிரகிருதிகள்தான்.

என்னைக் கேட்டால் சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்தவர்கள் அவர்கள் தான்.

கஜேந்திரர்கள் அணியின் அந்தப் போராட்டத்தை ஒட்டி ஒரு விடயம் அவதானிக்கத் தக்கது. அந்தப் போராட்டத்தின் ஆரம்ப இடமும் முடிவிடமும்தான் அது.

அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தக் கோரும் தமிழ்க் கட்சிகளின் நிலைப்பாட்டிற்கு எதிரான போராட்டம் என்று முன்னெடுக்கப்பட்டாலும், அது இந்தியாவுக்கு மாறான போராட்டம்தான். விடுதலைப் புலிகள் பயன்படுத்தும் சிவப்பு, மஞ்சள் வர்ணத்தினால் போராட்டம் ஜொலித்தது.

ஆரம்ப இடம் நல்லூரில் திலீபன் நினைவுத் தூபி மையம். இந்தியாவின் நடவடிக்கைகளுக்கு எதிராக சாகும் வரை உண்ணாநோன்பிருந்து தன் உயிரை இனத்துக்காக ஆகுதியாக்கிய தியாகி திலீபனின் நினைவு இடம் அது.

பேரணி முடிந்து, பொதுக் கூட்டம் நடந்த இடம் கிட்டுப் பூங்கா. இந்தியக் கடற்படையின் சுற்றிவளைப்பில் பிடிபடாமல் இருப்பதற்காக கடலில் தன்னுயிரை ஆகுதியாக்கிய புலிகளின் தளபதி கிட்டு.

திலீபன், கிட்டு இருவருமே இந்தியத் தரப்புக்கு எதிரான செயல்பாடுகளின் குறியீட்டு நாயகர்கள். அவர்களை முன்னிறுத்திய இடங்களிலிருந்து இந்தப் போராட்டத்தை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி முன்னெடுத்தமையிலும் சில குறியீட்டு நுட்பங்கள் புதைந்து கிடக்கத்தான் செய்கின்றன.

வழக்கமாக, இப்படி திலீபன் நினைவிடத்தில் விளக்கேற்றி, அஞ்சலி செலுத்தி, நிகழ்ச்சிகளை நடத்துவதற்கு எதிராகக் குத்தி முறிந்து, அடக்குமுறைக்குக் கிளம்பும் இலங்கைப் பொலிஸார், படையினர், புலனாய்வாளர்கள் அன்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் அந்த நிகழ்ச்சிக்கு மட்டும் – முழுவதும் மஞ்சள், சிவப்பு வர்ணஜாலங்களுடன் முன்னெடுக்கப்பட்ட அந்தச் செயற்பாட்டுக்கு மட்டும் – பெரிய இடைஞ்சல் ஏதும் செய்யாமல் பார்த்திருந்தமைக்குப் பின்னாலும் சர்வதேச மட்டம் வரையிலான ஒரு சூத்திரம் பொதிந்திருப்பதாக என் ஊடக நண்பர் ஒருவர் சந்தேகம் வெளியிட்டார். அவை வெறும் ஊகத்தில் எழுந்த சந்தேகம்தான். உறுதிப்படுத்தப்பட்ட ஆதாரங்கள் ஏதும் இதுவரை வெளியாகவில்லை.

சரி, நாளை நாட்டின் 74ஆவது சுதந்திர தினம். அதையொட்டி முள்ளிவாய்க்காலில் ஓர் ஆர்ப்பாட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருக்கின்றது.

பெரும்பாலும் அது சிவப்பு, மஞ்சள் கொடிகளுடன் முன்னெடுக்கப்படமாட்டாது. திலீபன் நினைவுத் தூபியில் கடந்த முப்பதாம் திகதி போராட்டத்தை ஆரம்பிக்க இடமளித்துப் பார்த்திருந்த இலங்கைப் பொலிஸார், படையினர், புலனாய்வுத் தரப்பின் நாளைய நிகழ்வுக்கும் அதே பொறுமை பேணுவார்களா? தெரியவில்லை. பார்த்திருப்போம்.

★ ★ ★

வடக்கு ஆளுநரின் பதவிக் கதிரைக்கு மேலாகக் கத்தி தொங்கிக்கொண்டிருப்பது பற்றிய விடயங்களை சில நாள்களுக்கு முன் என் பத்தியில் கோடி காட்டியிருந்தேன். தமது பதவிக் கதிரையை உறுதிப்படுத்திக் கொள்ள ஆளுநர் காத்திரமான நடவடிக்கைகள் எடுக்காவிட்டால், இப்பதவியில் நின்று, நீடித்து, நிலைப்பது துர்லபமாக இருக்கும் எனக் கோடி காட்டியிருந்தேன்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் முன்னால் பதவிப் பிரமாணம் செய்த ஆளுநர், ஒரு Courtesy க்குத் தன்னும் (மரியாதையின் நிமித்தம் தன்னும்) அரசாங்கத்தில் ஜனாதிபதிக்கு அடுத்து உயர் நிலையில் இருக்கும் முன்னாள் ஜனாதிபதியும் பிரதமருமான மஹிந்த ராஜபக்ஷவைச் சந்திக்கவில்லையே, இந்த நிலையில் பிரதமர் கூட, ஆளுநரைக் காபந்து பண்ண வரமாட்டாரே என்று ஆதங்கத்துடன் குறிப்பிட்டிருந்தேன்.

ஆளுநர் சுதாகரித்துக் கொண்டார் போலும். கடைசியாக, தாம் பதவியேற்று மூன்றரை மாதங்கள் கடந்த பின்னர் நேற்றுப் போய் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை மரியாதை நிமித்தமாகச் சந்தித்து உரையாடியிருக்கின்றார்.

தன் கதிரையை உறுதிப்படுத்தும் தந்திரோபாய நகர்வை ஆளுநர் கனகச்சிதமாக ஆரம்பித்துள்ளார் என்பதுதான் இதன் அர்த்தம். போகப் போகத்தான் பலன் தெரியும். பார்த்திருப்போம்.

– மின்னல் –

## ஸ்ரீலங்காவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

குறித்த போராட்டத்தில் அனைவரையும் பங்குகொள்ளுமாறு முல்லைத்தீவு ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது

முல்லைத்தீவு ஊடக அமையத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான மக்கள் பேரேழுச்சி இயக்க இணைப்பாளரும் சிவகுரு ஆதீன முதல்வருமான தவத்திரு வேலன் சுவாமிகள், வடக்கு – கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் சங்க உப செயலாளர் இரதீஸ்வரன் சபிதா உள்ளிட்டவர்கள் அழைப்பு விடுத்தனர்.

இதன்போது தவத்திரு வேலன் சுவாமிகள் கருத்துத் தெரிவிக்கும்போது,

பெப்ரவரி 4ஆம் நாள் ஸ்ரீலங்காவின் சுதந்திர தினத்தை முழுமையாகப் பகிஷ்கரித்து அது தமிழர் தேசத்தின் கரிநாள் என்ற அடிப்படையில் தமிழர்களாக சுயநிர்ணயத்துக்காகப் போராடி வருகின்ற மக்களாக எதிர்ப்புக்களை வெளிப்படுத்தி வருகின்றோம். இந்த ஆண்டு பெப்ரவரி நான்காம் திகதி காலை 10 மணிக்கு முள்ளிவாய்க்கால் முற்றத்தில் அனைத்து தமிழ் உறவுகளும் ஒன்றுகூடி தமிழர் தேசத்தின் கரிநாள் என்ற தொனிப் பொருளில் எங்கள் உணர்வுகளையும் உரிமைக்கான குரலினையும் எடுத்துக்காட்ட வேண்டும்.

வடக்கு, கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் சங்கம் தலைமையேற்று போராட்டத்தை நடத்த இருக்கின்றார்கள்.

எங்கள் தாய்மார்கள் கடந்த 12 ஆண்டுகளாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது என்று நீதி கோரி போராடி வருகின்றார்கள். சிவில் அமைப்புக்களாகிய நாங்கள் அனைவரும் ஒன்று திரண்டு ஆதரவு கொடுக்க வேண்டும். பாதிக்கப்பட்டதரப்புக்கள், பொதுமக்கள், மதகுருமார்கள், சிவில் சமூகங்கள், பல்கலைக்கழக மாணவர்கள், பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், மாதர் சங்கங்கள் சமூக மட்டத்தில் இருக்கும் அத்தனை பொதுக் கட்டமைப்புகளும் இதற்கு ஆதரவு கொடுக்க வேண்டும் என்று அன்பாக வேண்டி நிற்கின்றோம். பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரைக்குமான மக்கள் பேரெழுச்சி இயக்கமும் தன்னுடைய ஆதரவை வெளிப்படுத்தி நிற்கின்றது.

ஈழத்தமிழர்கள் அனைவரும் எழுச்சியுற்று இன்று எங்கள் எதிர்ப்பைப் பதிவு செய்யவேண்டியதேவைஉள்ளவர்களாக நாங்கள் இருக்கின்றோம். எந்த இடத்தில் எங்கள் இன அழிப்பு நடைபெற்றதோ, எந்த இடத்தில் கொத்துக்கொத்தாக மக்கள் உயிரிழந்தார்களோ, எந்த இடத்தில் எங்கள் போராட்டம் மௌனிக்கப்பட்டதோ அந்த இடத்தில் இருந்து நாங்கள் மீண்டும் எழுவோம் என்பதை இந்தப் போராட்டம் ஊடாக நாங்கள் வெளிப்படுத்த விரும்புகின்றோம்.

முள்ளிவாய்க்கால் மண் எங்கள் இனத்தின் பரிகார நீதிக்கான ஆரம்ப இடமாக அமைந்துள்ளது. எங்கள் உறவுகளை நாங்கள் கையளித்தோம். அவர்களுக்கு என்ன நடந்தது என்று இதுவரை தெரிய வில்லை. நீதி கேட்டு எங்கள் தாய்மார்கள் நீண்டகாலமாகப் போராட்டங்களை மேற் கொண்டு வருகின்றார்கள்.

இதனைக் கருத்தில்கொண்டு முள்ளிவாய்க்கால் முற்றத்தில் தொடங்கி வட்டுவாகல் பாலம் ஊடாக முல்லைத்தீவு நகர் வரை பேரணியாகச் சென்றடையவுள்ளோம். எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு அனைத்துத் தரப்பினரும் முழுமையான ஆதரவைத் தர வேண்டும். எங்கள் தமிழ்த் தேசியம், தாயகம், சுயநிர்ணயம் என்ற கோட்பாடுகளை வைத்து இன அழிப்புக்குப் பரிகார நீதியாக எங்கள் இனத்தை நோக்கி ஒரு திசையில் பொதுசன வாக்கெடுப்பு என்ற நோக்கில் இந்த எழுச்சியை வெளிக் கொண்டு வருகின்றோம். இதற்காக அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் – என்றார்.

## யாழில் செய்தியாளரை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

திரும்பிய ஊடகவியலாளரை வானில் வந்தவர்கள் மோத முற்பட்டமையுடன், அவரைத் தாக்கிக் காயப்படுத்தியும் இருந்தனர்.

இது தொடர்பாக ஊடகவியலாளரால் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டிருந்தது.

இந்தநிலையில் பொலிஸார் சந்தேக நபர் ஒருவரைக் கைதுசெய்தனர்.

அத்துடன் சம்பவத்திற்கு பயன்படுத்தப்பட்ட வாகனம் மற்றும் அதன் சாரதி மீதும் நடவடிக்கை எடுக்கவுள்ளதாக பொலிஸார் நீதிமன்றில் தெரிவித்தனர். சந்தேகநபர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

## 19 பேர் மரணம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

என்று அரச தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய நாட்டில் இதுவரையில் கொரோனாத்தொற்றால் மரணித்தோரின் மொத்த எண்ணிக்கை 15 ஆயிரத்து 492 ஆக அதிகரித்துள்ளது.

## சு.க. தலைமையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பணிகள் தற்போது வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. எந்தத் தேர்தல் நடைபெற்றாலும் அதற்கு முகங்கொடுப்பதற்கு நாம் தயார். இன்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கான கேள்வி மக்கள்மத்தியில்அதிகரித்துசெல்கின்றது. சுதந்திரக் கட்சி ஆட்சியை மக்கள் கோருகின்றனர். அந்த இலக்கை நோக்கி நாம் பயணிப்போம் எனவும் மைத்திரிபால சிறிசேன மேலும் குறிப்பிட்டார்.

அதேவேளை, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பை பலப்படுத்தி, புதிய ஆட்சிக்கான வியூகம் வகுக்கப்பட்டு வருகின்றது என்று அமைச்சர் மஹிந்த அமரவீர கூறினார்.

## எரிபொருள் விலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எரிபொருள் விலையை அதிகரிப்பதற்கு அனுமதி கோரி அடுத்த வாரம் அமைச்சரவை யோசனை ஒன்று முன்வைக்கப்படவுள்ளது எனத் தகவல் வெளியாகி உள்ளது எனவும், விலை அதிகரிக்க உத்தேசம் உள்ளதா எனவும் ஊடகவியலாளர் ஒருவர் கேள்வி எழுப்பினார்.

இதற்குப் பதிலளிக்கும்போதே நிதி அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

விலை அதிகரிக்கும் நிலை ஏற்பட்டால் அது குறித்து மகிழ்ச்சி அடைய முடியாது எனவும் அவர் குறிப்பிட்டார்.

எனினும், எரிபொருள் விலை அதிகரிக்கப்படும் என்றோ அதிகரிக்கப்படாது என்றோ நிதி அமைச்சர் உறுதியாக எதனையும் தெரிவிக்கவில்லை.

அதேவேளை, மத்திய வங்கியால் தொடர்ச்சியாகப் பணம் அச்சிடப்படுவது தொடர்பிலும் இதன்போது கேள்வி எழுப்பப்பட்டது.

பணம் அச்சிடுவது தற்போதைக்கு நிறுத்தப்படாது எனவும், தனது கையெழுத்திட்ட பணம் வெளிவரும் வரை அது தொடரட்டும் எனவும் நகைச்சுவையாக அமைச்சர் பஸில் பதில் வழங்கினார்.

## பருத்தித்துறை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வீதியில் இந்திய மீனவர்களால் அறுத்து நாசமாக்கப்பட்ட வலைகளையும் போட்டு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதனால் யாழ்ப்பாணம் – பருத்தித்துறை பிரதான வீதியின் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டன. பாடசாலை மாணவர்கள் மாத்திரம் வீதியால் செல்வதற்கு அனுமதிக்கப்பட்டனர்.

போராட்டம் இடம்பெற்ற பகுதியில் பொலிஸார் மற்றும் புலனாய்வாளர்கள் குவிக்கப்பட்டு கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
மின்னஞ்சல் -
kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம் -
076 443 8622



# அரசின் இரகசிய நோக்கங்களை சுட்டிக்காட்டவே மோடிக்கு கடிதம்

## என்கின்றார் விக்கி



'ஒரே நாடு; ஒரே சட்டம்' என்ற பேரில் சிறுபான்மையி னருக்குப் பாதுகாப்பு அற்ற புதிய அரசமைப்பை உரு வாக்குவதற்கான இரகசிய நோக்கத்தை சுட்டிக்காட்டும் வகையிலேயே நரேந்திர மோடிக்கு கடிதம் அனுப் பட்டதாக நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி. விக்னேஸ் வரன் தெரிவித்தார்.

1972 ஆம் ஆண்டு மற்றும் 1978 ஆம் ஆண்டு அரசமைப்புகள் கொண்டுவரப்பட்ட போது தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களால் முறையாக எதிர்க் கவும் புறக்கணிக்கவும் மட்டுமே முடிந்தது என அவர் தெரிவித்தார்.

ஆனால், வடக்கு மற்றும் கிழக்குத் தமிழ் பேசும் மக் களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்காத அரசமைப்பு ஒன்று நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப் படுவதைத் தடுக்கக்கூட முடியவில்லை என சுட்டிக்காட் டினார்.

அதன்படி இம்முறையும் இந்த அரசாங்கம் வடக்கு, கிழக்கில் உள்ள தமிழ் மக்களின் உள்ளக சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்காமல், எமது நலன்களுக்கு விரோதமான அரசமைப்பை நிறைவேற்றும் என சி.வி விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

இந்நிலையில் 'ஒரே நாடு; ஒரே சட்டம்' எனும் கருத் தாக்கம், புதிதாக அறிமுகம் செய்யப்படும் அரசு அமைப்பிலிருந்து மாகாண சபையை நீக்குவதற்கான ஒரு முன்னோடித் திட்டமாகக் கருதப்படுவதாக அவர் சுட்டிக்காட்டினார்.

எனவே 13 ஆம் திருத்தச் சட்டத்தை அமுல்படுத்து வதற்குக் கேட்பது, தமிழர்களாக அதிக அதிகாரம் கிடைக் கும் எனும் காரணத்துக்காக அல்ல, மாறாக இந்தத் திருத்த சட்டம் இல்லாவிட்டால் தமிழர்களுடைய அதி காரம் முழுதுமாகச் சுரண்டப்பட்டுவிடும் என்பதாலே என்றும் கூறினார்.

13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்துமாறு கேட் பதன் மூலம் இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர் வைத் தேடவில்லை என்றும் மாறாக ஒரு நிரந்தர தீர்வு கிடைக் கும் வரையில் மாகாண சபைகள் இருக்க வேண்டும் என்பதாலேயே இதனைக் கோருவதாகவும் விக்னேஸ் வரன் தெரிவித்தார்.

## ராகம வைத்திய பீடத்தின் மாணவர் தாக்கு; விரிவான விசாரணைக்கு வீரசேகர பணிப்பு

ராகம வைத்திய பீடத்தின் மாணவர்கள் மீதான தாக்கு தல் குறித்து விரிவான விசாரணைகளை மேற்கொள்ளு மாறு பொது பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர பணிப் புரை விடுத்துள்ளார்.

பொலிஸ் மா அதிபருக்குப் பணிப்புரை விடுத்துள்ள நிலையில் இரண்டு பொலிஸ் குழுக்கள் விசாரணைக்கு அனுப்பப்பட்டுள்ளன.

வெளியாளர்களால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் ராகம வைத்திய பீடத்தின் 04 மாணவர்கள் காயமடைந் தனர்.

ராகம வைத்திய பீடத்தின் நான்காம் ஆண்டில் கல்வி பயிலும் சில மாணவர்கள் மீது விடுதியில் வைத்து தாக் குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.



இந்த சம்பவம் தொடர்பில் இதுவரை ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

(விரிவான செய்தி 07ஆம் பக்கத்தில்...)

## பொரளை கைக்குண்டு சம்பவம் சந்தேக நபர் மூவர் விடுதலை

பொரளை அனைத்து புனிதர்கள் தேவா லயத்தில் கைக்குண்டு வைக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் கைது செய் யப்பட்ட மூவரை விடுதலை செய்ய உத்தர விடப்பட்டுள்ளது.

தேவாலய ஊழியர் உட்பட மூவரே இவ்வாறு விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பு மேலதிக நீதிவான் நீதிமன்றத் தால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

குறித்த சம்பவத்தின் பிரதான சந்தேக நபரான வைத்தியர் தொடர்ந்தும் தடுப்பு காவ லில் வைக்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப் படுகின்றது.



## வீட்டில் இருந்த சிறுவன் மாயம் பொலிஸார் விடுத்த கோரிக்கை

மட்டக்களப்பில் சந்திவெளி பிரதே சத்தைச் சோந்த 15 வயதுடைய சிறுவன் ஒருவர் வீட்டில் இருந்து நிலையில் கடந்த 28 ஆம் திகதி காணாமல் போயுள்ளார் என நேற்று (புதன்கிழமை) பெற்றோர் முறைப் பாடு செய்துள்ளனர் என சந்திவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

சந்திவெளி பத்தினி அம்மன் கோவில் வீதி ஜீவபுரத்தைச் சேர்ந்த 15 வயதுடைய அன்ரனிது அனுராஸ் என்ற சிறுவன் சம்பவதினமான கடந்த மாதம் 28ஆம் திகதி வீட்டில் இருந்துள்ள நிலையில் காணாமல் போயுள்ளார்.

கையடக்கத் தொலைபேசி கவரினுள் வைத்திருந்த இரண்டாயிரம் ரூபா பணத்தை காணவில்லை எனவும் அவரை எங்கு தேடியும் காணவில்லை எனவும் அவரைகண்டுபிடித்துத்தருமாறுபெற்றோர் முறைப்பாடு செய்துள்ளனர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சிறுவன் பற்றிய தகவல்கள் தெரிந் தால் அருகிலுள்ள பொலிஸ் நிலையத்தில் அறிவிக்குமாறு பொதுமக்களைப் பொலி ஸார் கோரியுள்ளமையுடன் இது தொடர் பான மேலதிக விசாரணைகளை சந்தி வெளி பொலிஸார் மேற்கொண்டு வருகின் றனர்.

## பொரளை தேவாலய கைக்குண்டு: மற்றொருவர் இரகசிய வாக்குமூலம்

பொரளை தேவாலயத்தில் கைக்குண்டு மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பாக கொழும்பு மேலதிக நீதிவான் ராஜீந் திர ஜயசூரிய முன்னிலையில் மற்றுமொரு சந்தேகநபர், செவ்வாய்க்கிழமை இரகசிய வாக்குமூலம் ஒன்றை வழங்கினார்.

தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள வைத்தியரிடம் கைக்குண்டை வழங்கினார் எனக் கூறப் படும் கொடித்துவக்கு ஆராச்சிகே ருவன்சிறி பிரேமச்சந் திர என்ற சந்தேக நபர் சுமார் ஒன்றரை மணித்தியாலங் கள் இரகசிய வாக்குமூலத்தை வழங்கினார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மொத்தம் ஏழு சந்தேக நபர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் முன்னதாக, அரச தரப்பு சாட்சியாக 13 வயது சிறுவன் ஒருவன் நீதிமன்றத்தில் இரகசிய வாக்கு மூலத்தை வழங்கியிருந்தான்.

மேலும், இதே சம்பவம் தொடர்பில் தற்போது பொலிஸ் காவலில் உள்ள 65 வயதுடைய சந்தேக நப ரான லியனகே தயாசேன மற்றும் ஓய்வுபெற்ற வைத்தி யர் ஷெர்லி தயானந்த ஹேரத் ஆகியோரும் நீதிமன் றில் இரகசிய வாக்குமூலங்களை வழங்கியுள்ளனர்.

## உயர்தரப் பரீட்சைக் காலத்தில் சகல பாடசாலைகளும் விடுமுறை

க.பொ.த. உயர்தரப் பரீட்சை காலப் பகுதியில் அரச மற்றும் அரச அனுசரணை பெற்ற தனியார் பாடசாலைகளுக்கும் விடுமுறைவழங்கப்படவுள்ளதாககல்விஅமைச்சுதெரிவித்துள்ளது.

அதன்படி, குறித்தபாடசாலைகளின்அனைத்துவகுப்புகளுக்கும் இவ்வாறு விடுமுறை வழங்கப்படவுள்ளதாக கல்வி அமைச்சர் அறிவித்துள்ளார்.

அதற்கமைய, எதிர்வரும் 07 ஆம் திகதி முதல் மார்ச் 07 ஆம் திகதி வரை விடுமுறை வழங்கப்படவுள்ளதாக அவர் அறிவித்துள்ளார்.

## அனுரவின் வாகனம் மீது தாக்கு பொலிஸில் ஜே.வி.பி. முறைப்பாடு!

தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க பயணித்த வாகனம் மீது, முட்டைத் தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவம் தொடர்பாக ஜே.வி.பி. நேற்று (புதன்கிழமை) பொலிஸ் தலைமை யகத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளது.

கம்பஹா கலகெடிஹேன பகுதியில் அண்மையில் இடம்பெற்ற தேசிய மக்கள் சக்தியின் மாநாட்டில் பங்கேற்கச் சென்ற கட்சியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க பயணித்த வாகனம் மீது முட்டைத் தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பாகவே உரிய விசாரணை நடத்தி, சந் தேக நபர்களைக் கைது செய்யுமாறு கோரி, இவ்வாறு முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

## மீண்டும் தீவிரமடையும் டெங்கு ஜனவரியில் 7,702 நோயாளர்கள்

இந்த வருடத்தின் ஆரம்பம் முதல் ஜனவரி மாதம் இறுதி வரை நாட்டில் 7 ஆயிரத்து 702 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் எனத் தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு அறி வித்துள்ளது.

இதேநேரம் கடந்த 2021 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில், 2 ஆயி ரத்து 122 டெங்கு நோயாளிகள் மட்டுமே அடையாளம் காணப் பட்டனர் என அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

கடந்த வருடத்தை விட இந்த வருட ஆரம்பத்தில் 5 ஆயிரத்து 580 டெங்கு நோயாளர்கள் அதிகரித் துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட் டுள்ளது.

காய்ச்சல், தலைவலி , மூட்டு வலி, வாந்தி 2 நாள்களுக்கு மேல் நீடித்தால் மருத்துவரை அணுகு மாறு அறிவுறுத்தல் விடுக்கப்பட் டுள்ளது.

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## என்ன செய்யப் போகிறது அமெ.?

முன்னைய சோவியத் ஒன்றியத்தில் அங்கத்துவம் பெற்றிருந்த ரஷ்யாவும், உக்ரைனும் இப்போது முறுகிக் கொண்டிருக்கின்றன. அந்தப் பிராந்தியத்தை போர் மேகங்கள் சூழ்ந்துள்ளன. எந்தச் சமயத்திலும் பெரும் யுத்தம் மூளலாம் என்று உலகம் அஞ்சுகின்றது.

ரஷ்யாவின் எல்லைப் புற நாடு உக்ரைன். பனிப்போர் காலத்தை அடுத்து சோவியத் யூனியன் உடைந்தபோது அந்த ஒன்றியத்திலிருந்து பிரிந்து சென்று தனி நாடாகியது உக்ரைன். அது இப்போது அமெரிக்காவின் கைப்பொம்மையாகி விட்டது என்பது ரஷ்யாவின் குற்றச்சாட்டு.

அமெரிக்கா சார்பில் இயங்கும் நேட்டோவில் தனது எல்லை நாடான உக்ரைன் இணைவது தன் பாதுகாப்புக்குப் பேராபத்து என்று கருதும் ரஷ்யா அந்தத் திட்டத்தைக் கடுமையாக எதிர்க்கின்றது. அத்தோடு உக்ரைன் எல்லையில் தனது படைகளை லட்சக் கணக்கில் குவித்தும் வருகின்றது. இது, திடீர் படை நடவடிக்கை மூலம் உக்ரைனை ஆக்கிரமிக்கும் ரஷ்யாவின் சதித் திட்டத்திற்கான தயாரிப்பு வேலைதான் என்று அமெரிக்கா குற்றம் சுமத்துகின்றது.

உக்ரைனை ஒட்டி யுத்த மேகம் கருக்கட்டியுள்ள நிலையில், யுத்தம் வெடித்தால் உக்ரைனுக்கு ஆதரவாக அமெரிக்காவும் நேரடியாகக் களத்தில் இறங்கக் கூடிய ஏதுநிலைகளும் உண்டு.

ரஷ்யா, உக்ரைனை ஆக்கிரமித்தால் ரஷ்யாவுக்கு எதிராகப் பொருளாதாரத் தடை விதிக்கப்படும் என அமெரிக்காவும் பிரிட்டனும் அறிவித்துள்ளன.

ஆனால், அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகள் அறிவிக்கும் பொருளாதாரத் தடைகளின் செல்லும்படித் தன்மை கேள்விக்கும் – கேலிக்கும் – உள்ளாக்கப்படும் இன்றைய சூழலில், அத்தகைய நடவடிக்கை பிரயோசனமான தாக்கம் எதையும் ஏற்படுத்துமா என்ற கேள்வியும் எழுந்துள்ளது.

அதுவும் அமெரிக்கா விதித்த பொருளாதாரத் தடை, ஆயுத விநியோக – விற்பனைத் தடை ஆகியவற்றை மீறி இலங் கையின் யுத்த காலத்தின் போது கொழும்பு அரசு வட கொரியாவிடமிருந்து கறுப்புப்பணம் மூலம் ஆயுதக் கொள்வனவில் ஈடுபட்டமையை இலங்கை நாட்டின் நிதி அமைச்சரும், ஆளும் ராஜபக்ஷ சகோதரர்களில் மிக முக்கியமானவருமான பஸில் ராஜபக்ஷ வெளியிட்டிருக்கையில், அமெரிக்காவின் பொருளாதாரத் தடை நடவடிக்கை கேலிக்குள்ளாகியிருக்கின்றது.

இன்றைய உக்ரைன் – ரஷ்ய முரண்பாட்டை விட அமெரிக்காவுக்கு நெருக்கடி மிகுந்ததும் சிக்கலானதுமான பிரச்சினை வட கொரிய விவகாரமாகும். அணு ஆயுதத் தயாரிப்பு, ஏவுகணைத் தொழில் நுட்பம் போன்றவற்றில் அந்த நாடு அதீத வளர்ச்சி கண்டு வருவது அமெரிக்காவுக்கு மட்டுமல்ல, முழு உலகுக்குமே பேராபத்து அச்சுறுத்தலாகும். அந்த நாட்டுக்கு எதிராக அமெரிக்கா விதித்த பொருளாதாரத் தடையை மீறி, கறுப்புப் பணம் மூலமாக அந்த நாட்டிடம் ஆயுதங்களை வாங்கிக் குவித்து, அதன் மூலமே புலிகளுக்கு எதிரான யுத்தத்தை இலங்கை அரசுப் படைகள் முன்னெடுத்தன என்ற ஒப்புதல் வாக்குமூலம் இப்போது வெளியாகியிருக்கின்றது.

அமெரிக்காவினதும் பிரஜையான இலங்கை நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷவும், அமெரிக்கத் தடையை மீறிய இந்த மோசமான நடவடிக்கைக்குத் துணை போயிருக்கின்றார் என்பதும் இப்போது அம்பலமாகியிருக்கின்றது.

புலிகளுக்கு எதிரான இறுதிச் சமரின்போது அரசுப் படைகள் மோசமான இரசாயன ஆயுதங்களைப் பயன்படுத்தின என்ற குற்றச்சாட்டையும் சேர்த்து அமெரிக்கா விசாரணை நடத்த வேண்டிய காலகட்டம் இறுதியாக வந்து விட்டது என்றே தோன்றுகின்றது. அத்தகைய ஆயுதத்தை விநியோகித்த தரப்பு யாது என்பதை ஊகிப்பதற்கும் இப்போது வாய்ப்புக் கிட்டியுள்ளது. இத்தகைய மோசமான ஆயுத பாவனை பற்றிய தகவல்களைத் திரட்டியமையினாலேயே பத்திரிகையாளர் பிரகீத் எக்னெலிகொட கடத்திக் காணாமலாக்கப்பட்டார் என்ற சந்தேகம் பலமாக நிலவுவதும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

இலங்கை விடயத்தில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில் தீர்மானங்களுடன் சுருண்டு கிடக்காமல், அதற்கும் அப்பாலும் செயற்பட வேண்டிய சூழல் அமெரிக்கா உட்பட்ட மேற்குலகத்துக்கு ஏற்பட்டிருக்கின்றது என்பதுதான் நிலைமை.

# விமலுக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு!



அமைச்சர் விமல் வீரவன்ஸவிற்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட சட்டவிரோதமான வருமானம் தொடர்பான வழக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான வழக்கு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி நவரத்ன மாரசிங்க முன்னிலையில் நேற்று (புதன்கிழமை) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2010 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரை ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கத்தில் அமைச்சராகப் பதவி வகித்த காலப் பகுதியில் 7 கோடியே 50 லட்சம் ரூபா வரை சட்டவிரோதமான முறையில் வருமானம் பெற்றமை, சொத்துச் சேர்த்தமை தொடர்பில் இலஞ்சம் மற்றும் ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரணை செய்யும் ஆணைக்குழுவால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கு நேற்று கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி நவரத்ன மாரசிங்க முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, விமல் வீரவன்ஸவை பிரதிநிதித்துவம் செய்யும் சட்டத்தரணி மன்றில் பிரசன்னமாகவில்லை. சுகவீனம் காரணமாக அவர் மன்றிற்கு சமுகமளிக்காத நிலையில், இந்த வழக்கை எதிர்வரும் ஜூன் மாதம் 17 ஆம் திகதிக்கு நீதிபதி ஒத்திவைத்து உத்தரவிட்டுள்ளார்.

முறைப்பாட்டாளரின் இரண்டாவது, மூன்றாவது, நான்காவது மற்றும் ஐந்தாவது சாட்சிகளையும் எதிர்வரும் ஜூன் மாதம் 17 ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலைப்படுத்துமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

# நாட்டை மீள முடக்குவதற்கான அச்சத்தை நிராகரிக்கமுடியாது!

## அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை

கொரோனாவுக்கு எதிரான தடுப்பூசியை வலுப்படுத்த, அரச அதிகாரிகள் உட்பட்டவர்கள் உரிய நடவடிக்கைகள் எடுக்காது போனால், மற்றொரு முடக்கலை நோக்கி, நாட்டை நகர்த்துவதற்கான அச்சம் இருப்பதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

அதே நேரத்தில் நாட்டில் மற்றொரு கொரோனா அலையின் பரவலைத் தடுக்க சுகாதார வழிகாட்டுதல்களைக் கடைப்பிடிக்குமாறும் அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

இதேவேளை கொரோனா வைரஸுக்கு எதிரான மூன்றாவது தடுப்பூசியை பெற்றுக் கொள்ளவதில் பொதுமக்கள் ஆர்வம் காட்டவில்லை என்று சங்கத்தின் பொதுக்குழு உறுப்பினர் பிரசாத் கொலம்பகே தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தால் வெளியிடப்பட்ட சுகாதார வழிகாட்டுதல்களைப் பின்பற்றி பொது மக்கள் பணிபுரியும் எந்த இடத்தையும் காண முடியவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் தடுப்பூசி அளவைப் பெறுவதில் ஆர்வத்தை ஏற்படுத்துவதற்கு சுகாதார அமைச்சகம் மற்றும் அரசாங்கத்திடமிருந்து உரிய செயற்பாடுகள் மேற்கொள்ளப்படவில்லை என்றும் கொலம்பகே தெரிவித்துள்ளார்.

கொரோனாவின் தீவிரத்தன்மை குறித்த விழிப்புணர்வு இல்லாமை காரணமாக, கடந்த சில வாரங்களாகக் கொரோனாத் தொற்றுக்களில் மற்றும் இறப்புக்களில் திடீர் அதிகரிப்பு பதிவாகி வருகின்றது எனவும் கொலம்பகே கூறியுள்ளார். அரச மற்றும் தனியார்துறை நிறுவனங்களில் சுகாதார வழிகாட்டுதல்கள் பின்பற்றப்படுவதில்லை.

பொதுமக்கள் முகக்கவசங்கள் அணிவதைத் தவிர, ஏனைய சுகாதார நடைமுறைகளை மறந்துவிட்டனர் எனவும் வைத்தியர் கொலம்பகே குற்றம் சுமத்தியுள்ளார்.

எனவே மற்றொரு கொரோனாத் தொற்று அதிகரிப்புக்களும் அதிகரித்த இறப்புக்களும் ஏற்படுமானால், அதற்கு அரச, தனியார் மற்றும் ஊடகத் துறைகளும் பொறுப்பேற்க வேண்டும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

# நியோகோவ் வைரஸும் நாட்டில் பரவும் அபாயம்!

தென்னாப்பிரிக்காவின் புதிய கொவிட் மாறுபாடான நியோகோவ் அல்லது பி.ஏ.2 வைரஸ், எதிர்வரும் நாள்களில் நாட்டுக்குள் நுழையும் அபாயம் இருக்கிறது என சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இது பரவும் பட்சத்தில் தொற்றுக்குள்ளாகாமல் பாதுகாத்துக் கொள்வதற்கு அனைவரும் தயாராக இருக்க வேண்டும் என பிரதி சுகாதார பணிப்பாளர் நாயகம் வைத்தியர் சுசி பெரேரா தெரிவித்துள்ளார்.

இந்த வகை வைரஸ் தற் போது தென்னாபிரிக்கா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளிலும் ஐரோப்பிய நாடுகளிலும் பரவி வருகிறது. இதனால் பாதிக்கப்படும் மக்கள் உயிரிழக்கும் அபாயம் உள்ளது என சுகாதாரத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த மாறுபாடில் இருந்து தப்பித்துக் கொள்வதற்கு கொவிட் பூஸ்டர் தடுப்பூசிகளைப் பெற்றிருப்பது அவசியமாகும். இதனால் உடனடியாகச் சென்று பூஸ்டர் தடுப்பூசிகளைப் பெற்றுக் கொள்ளுமாறு அவர் பொது மக்களிடம் கேட்டுக்கொண்டுள்ளார்.

# பார்கள், இறைச்சிக் கடைகள் சுதந்திரதினத்தன்று மூடப்படும்

## பொது நிர்வாக அமைச்சு அறிவிப்பு

இலங்கையின் 74 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு மதுபானசாலைகள், இறைச்சி விற்பனை தளங்கள் மூடப்படுகின்றன என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி நாளை 4 ஆம் திகதி மதுபானசாலைகள், இறைச்சி விற்பனை தளங்கள் மூடப்படுகின்றன என பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார்.

காலைக்கதிர்
Kalaikkathir

# நிதி அமைச்சர் பஸிலையும் விசாரணை செய்யவேண்டும்

## வலியுறுத்துகிறார் இரா.சாணக்கியன்

நிதி அமைச்சர் வடகொரியாவில் இருந்து கறுப்பு டொலர் மூலம் ஆயுதம் வாங்கினார் எனச் சொல்லுகின்றார். இந்த கருத்தைக்கொண்டுகறுப்புப்பணத்தைப் பயன்படுத்தியமை தொடர்பில் அவரை முதலில் விசாரணை செய்ய வேண்டும் என மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற மாவட்ட அபிவிருத்திக்குழுக் கூட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் கூறியவை வருமாறு–

மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம் என்று சொல்லி ஒரு கூட்டம் இங்கு இடம் பெற்றது. மாவட்டத்தின் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் எதுவும் இந்தக் கூட்டத்தில் ஆராயப்படவில்லை. அதற்குக் காரணமாக நிதி இல்லை என்று சொல்லப்படுகின்றது.

அண்மையில் நீதியமைச்சர் வடக்கிற்கு சுற்றுப் பயணமொன்றை மேற்கொண்டிருந்தார். இதில் காணாமல் போனவர்களின் விடயம் தொடர்பில் ஆராய்ந்துள்ளார் எனவும் சொல்லப்படுகின்றது. உண்மையில் இந்த உறவுகள் காணாமல் போனவர்கள் அல்லர். அவர்கள் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் என்பதை அவர் மறந்துவிடக் கூடாது. காணாமல் போனவர்களுக்கு ஒரு லட்சம் ரூபா வழங்குவதாகத் தெரிவித்துள்ளார்.

இந்த ஒரு லட்சம் ரூபாவுக்காகத் தாய்மார் இன்று வரை வீதியில் போராடவில்லை என்பதையும் அவர் விளங்கிக் கொள்ள வேண்டும்.

அத்துடன் நேற்றைய செய்தியில் பார்த்திருந்தேன் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, தாங்கள் வடகொரியாவில் இருந்து கறுப்பு டொலர்களைப் பயன்படுத்தி யுத்தத்திற்கு ஆயுதங்கள் பெற்றுள்ளார் எனத் தெரிவித்திருந்தார். ஒரு நாட்டின் நிதி அமைச்சர் எவ்வாறு இவ்வாறான தொரு கருத்தைச் சொல்ல முடியும்?

பொருளாதாரத் தடை விதிக்கப்பட்ட ஒருநாட்டில் கறுப்புப் பணத்தைப் பயன்படுத்தி ஆயுதம் வாங்கி இந்த யுத்தத்தை நடத்தினார் எனச் சொல்லுகின்றார்கள். இனிவரும் காலங்களில் இன்னும் இன்னும் எத்தனை உண்மைகளை நாங்கள் அறியக் கூடியதாக இருக்குமோ தெரியவில்லை.

நீதி அமைச்சர் சொல்லுகின்றார் காணாமல் போனாருக்கு நட்டஈடு கொடுப்பதாகவும், அதே நேரத்தில் நிதி அமைச்சர் வடகொரியாவில் இருந்து கறுப்பு டொலர் மூலம் ஆயுதம் வாங்கியதாகவும் சொல்லுகின்றார். இந்த கருத்தைக் கொண்டு கறுப்புப் பணத்தைப் பயன்படுத்தியமை தொடர்பில் அவரை முதலில் விசாரணை செய்ய வேண்டும். அமெரிக்கா போன்ற நாடுகள் இதனைக் கவனிக்க வேண்டும்.

தொடர்ந்தும் இந்த அரசாங்கம் இவ்வாறு ஏமாற்றிக் கொண்டிருக்கின்ற விடயங்களை வன்மையாகக் கண்டிக்க வேண்டும். எமது மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவர் சொன்னார் பொங்கலுக்குப் பிறகு எமது மாவட்டத்தில் பல மில்லியனர்கள் உருவாகுவார்கள் என்று. ஆனால் இன்று மாவட்டத்தில் உருவான ஒரு மில்லியனர் கூட இல்லை. இன்று மாவட்ட விவசாயிகள் எல்லாம் மிக மோசமான நிலையில் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். இன்று இந்தக் கூட்டத்தில் கூட விவசாயிகளுக்கு நட்டஈடு வழங்குவதைக் கூட நாங்களே முன்வைக்க வேண்டி இருக்கின்றது.




அதே நேரத்தில் இன்று ஒமிக்கறோன் மட்டக்களப்பில் அதிகமாக இருக்கும் என்று பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். அப்படியான ஒரு நேரத்தில் அவசரமாக இந்தக் கூட்டம் எதற்காக? இன்று முக்கியமானவர்கள் பலரை இந்தக் கூட்டத்துக்கு அழைக்கவும் இல்லை.

வழமையாகப் பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டங்கள் நடைபெற்று அதில் தீர்மானிக்கும் விடயங்களை மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் கொண்டு வருவதுதான் வழமை. ஆனால் மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம் நடந்திருக்கின்றது. பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டங்கள் இனிவரும் காலங்களிலும் நடக்க இருக்கின்றன. இவ்வாறானதோர் குழப்ப நிலை இந்த மாவட்டத்தில் இருக்கின்றது. கூட்டங்களில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாங்கள் கதைக்க வேண்டும் என்றால் கையை உயர்த்திக் கதைக்க வேண்டுமாம். இது சந்திர காந்தனின் பிறந்தநாள் விழா அல்ல நாங்கள் கையை உயர்த்திவிட்டுக் கதைப்பதற்கு.

இந்தக் கூட்டத்தில் கிழக்கு மாகாண ஆளுநர் பல விடயங்களுக்குத் தீர்வுகளைத் தருவதாகச் சொல்லியிருந்தார். விசேடமாக ஐ புறொஜக்ட் நிதியை வைத்திருக்கும் நபரிடமிருந்து அந்த நிதியை மீள எடுத்து அந்தத் திட்டத்துக்கு வழங்குவதற்கான அனுமதியை அவர் வழங்கியிருந்தார். அதேவேளை கெவிலியாமடுவில் இடம்பெறும் சட்டவிரோத குடியேற்றங்களைத் தடுப்பது தொடர்பில் ஆராய்வதற்கு நாங்கள் வலியுறுத்தியிருந்தோம். அம்பிட்டிய சுமணரத்தின தேரர் எமது பண்ணையாளர்களின் மாடுகளை வலுக்கட்டாயமாகப் பறித்தமை தொடர்பிலும் நாங்கள் தெரியப்படுத்தியிருந்தோம்.

இந்த நாட்டிலே ஜனாதிபதிக்கும் அறிவில்லை, நிதியமைச்சருக்கும் அறிவில்லை, அவர்களின் பிரதிநிதிகளாக எமது மாவட்டத்தில் இருப்பவர் களுக்கும் அறிவில்லை என்ற நிலைமையே இருக்கின்றது. – எனத் தெரிவித்தார்.

## வெல்லம்பிட்டியில் துப்பாக்கிச் சூடு!

வெல்லம்பிட்டிய, சாலமுல்ல, கமகேவத்த பிரதேசத்தில் துப்பாக்கிச் சூட்டு சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது எனப்பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத இருவர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் பல குற்றச் செயல்களுடன் தொடர்புடைய நபர் ஒருவர் படுகாயமடைந்து கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

படுகாயமடைந்தவர் ஹங் வெல்ல பிரதேசத்தைச் சேர்ந்த 33 வயதுடையவர். பாதிக்கப்பட்ட நபர் பெண் ஒருவருடன் ஓட்டோவில் கமகேவத்தை நோக்கி பயணித்த போதே துப்பாக்கிச் சூடு இடம்பெற்றது எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

## வட்டுக்கோட்டையில் வீடுடைத்துத் திருட்டு

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சங்கரத்தை – ஓடக்கரை வீதியில் உள்ள வீடு ஒன்றிலிருந்து கடந்த செவ்வாய்க்கிழமை நகையும்பணமும்திருட்டுபோயுள்ளனஎனத்தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது–

வீட்டின் உரிமையாளர் கிளிநொச்சி பனை தென்னை அபிவிருத்தி சங்கத்தில் கடமையாற்றி வருகின்ற நிலையில் அவர் கடமைக்குச் சென்றிருந்தார்.

அவரது மனைவி, மகளை பாடசாலையில் இருந்து தனது தாயார் வீட்டுக்கு அழைத்துச் சென்றுவிட்டு வீடு வந்துள்ளார்.

இதன்போது வீட்டின் கண்ணாடி உடைக்கப்பட்டு ஒரு பவுண் நகையும் பத்தாயிரம் ரூபா பணமும் களவாடப்பட்ட விடயம் தெரிய வந்துள்ளது.

அதனையடுத்து வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## இரு டிப்பர்கள் ஒன்றுடன் ஒன்று மோதியதில் வவுனியாவில் விபத்து

### ஒருவர் படுகாயம் அடைந்தார்





வவுனியா மாவட்ட செயலகத்துக்கு முன்பாக ஏ9 வீதியில் இரு டிப்பர் வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை மாலை இடம்பெற்ற இந்த விபத்து சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது –

வவுனியா, ஹொரவப்பொத்தானை வீதியூடாக ஓமந்தை பகுதி நோக்கி டிப்பர் பயணித்துக் கொண்டிருந்த போது மாவட்ட செயலகத்துக்கு முன்பாக டிப்பர் வாகனத்தை சாரதி திடீரென பிரேக் பிடித்துள்ளார்.

இதன்போது, டிப்பர் வாகனத்துக்கு பின்பக்கமாக வந்து கொண்டிருந்த மற்றுமொரு டிப்பர் வாகனம் முன்சென்ற டிப்பருடன் மோதுண்டு விபத்துக்குள்ளானதுடன், வீதிக்கு அருகே நின்ற மோட்டார் சைக்கிளும் டிப்பருடன் மோதி விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளில் நின்ற ஒருவர் படுகாயமடைந்த நிலையில், வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதுடன் பின்பக்கமாக வந்த டிப்பர் மற்றும் மோட்டார் சைக்கிள் என்பன பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

சம்பவ இடத்துக்கு விரைந்த வவுனியா போக்குவரத்து பொலிஸார் விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். 100



இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

- செல்லத்துரை ரவீந்திரன் -

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

## அங்கம் - 270

**689.இந்தியாவுக்கான கோரிக்கை அழுத்தமாகவும் ஆளுமையாக வும் செய்யப்பட்டிருக்க வேண்டும் என்பதன் அர்த்தம்?**

இது தொடர்பில் பின்னைய காலங்களிலிருந்து, முன்னைய காலங்களில் தமிழ் மக்கள் நடத்திய அரசியலைப் பார்க்க வேண்டும்.

13 ஆம் திருத்தம் அரசமைப்புச் சட்டத்தில் இருக்கின்றது. இதனை ஆக்கவோ ஏதும் திருத்தம் செய்யவோ நாடாளுமன்றத்துக்குப் போக வேண்டிய தேவை எதுவும் இருக்கவில்லை. நல்லாட்சிக் காலத்தில் இதனை நிர்வாக முறையாக அமுல்படுத்த வேண்டும், அமுல்படுத்தினால்தான் தொடர்ந்து ஆதரவு தரலாம் என்று கூட்டமைப்பினர், அன்றில்' 'விமர்சித்த அனுசரணை' தந்த உலகத் தமிழர் பேரவை (Global Tamil Forum) போன்றோர் நிலைப்பாடு எடுத்திருக்க வேண்டும். நிர்வாக முறையாக சட்டத்தில் இருந்த ஒன்றை அமுல்படுத்துவதற்கு இப்படியாக ஆடம்பரமான பிரிவினையைக் காட்டும் திருவிழாக்களை எந்தத் தமிழ் பரப்பும் செய்திருக்க வேண்டிய தேவையிருந்திருக்கவில்லை. போருக்குப் பின்னான அரசியலைப் பார்த்தால் கூட்டமைப்பினர்



கூட அதனை இந்தியாவிடம் அணுகி கேட்பதைத் தவிர்த்து, 13+ எனப் பேசப்பட்டதை சிங்கள அரசிடம் நேரடியாகப் பேசிப் பெற்றுக்கொள்ளலாம் என்ற எண்ணத்தில்தான் இருந்தனர். இந்த நம்பிக்கைகளில் அவர்கள் தாங்களாகவே இந்தியாவுக்குச் சென்று மன்மோகன் சிங்கின் காலத்திலோ, பின்னரோ கூட அழுத்தம் தந்தது கிடையாது. சந்தர்ப்பங்கள் ஏற்படுத்தப்பட்ட போதெல்லாம் 13+ க்கும் மேலான ஒன்றை ராஜபக்ஷக்களுடன் பேசிக் கொண்டே இருக்கிறோம் என்ற பதில்கள் வந்தன. அதனை தவிர்ப்பதிலேயே - சாக்குப் போக்குகள் சொல்வதிலேயே - கண்ணாயிருந்தார்கள். 13+ வரும் வரை 13 ஐ யாவது நடத்த அழுத்தம் தரவில்லை. பின்னர் ஆட்சி மாற்றத்துக்கு ஆதரவு தந்து, ரணில் மூலம் புதிய அரசமைப்பை ஆக்க முயன்றார்கள். ஆனால் ரணில் விக்கிரமசிங்கவோ தீப்பெட்டியோடு நாடாளுமன்றத்துக்கு வந்து, சந்திரிகாவின் கூட்டாட்சி அரசமைப்புச் சட்ட மூலத்துக்கு நெருப்புக் குச்சி கொழுத்திக் கொடுத்தவர் என்பதையும், ஐக்கிய தேசியக் கட்சியின் மத்தியகுழுக் கூட்டத்தில் சமஷ்டி



முறையை ஏற்று ஆக்கப்பட்ட தீர்மானத்தை அதன் உறுப்பினர் டி.எம்.சுவாமிநாதனைக் கொண்டு முன்மொழிந்து நீக்கியவர் என்பதையும் மறந்து விட்டார்கள்.

நல்லாட்சியைத் தூக்கி எறிந்து ராஜபக்ஷக்கள் பெரும்பான்மையுடன் கோட்டாபயவை ஜனாதிபதியாகக் கொண்டு வந்தபோது, யாருடன் இருந்த எந்த நம்பிக்கையில் அவர்கள் ஒரு நீதியான தீர்வை சமஷ்டி முறையில் தருவார் என சம்பந்தன் எதிர்பார்த்துக் கூட்டமைப்பையும் முடக்கி வைத்திருந்தார் என்பதும் தெரியாது. ஆனால் அந்த ஏமாற்றத்திலேயே இப்பொழுது கொதிக்கிறார். பொருமுகிறார். இதனை ஒட்டி சிங்கள - பௌத்த பேரினவாதம் அலட்டிக் கொள்ளப்போவதில்லை. அவர்கள் ஐ.நா மனிதப் பேரவையில் நடக்கக் கூடிய மார்ச் 22 தீர்மானத்தில்தான் குறியாக இருப்பார்கள்.


ஓர் உன்மத்த பெரும்பான்மையோடு தாக்குப் பிடிக்க முடியுமா என சில புலம்பெயர் செயற்பாட்டாளர்களிடையே எழுந்த சிந்தனைகளிலேயே தமிழர் தகவல் நடுவத்தின் (Tamil Information Center) அனுசரணையோடு இந்தியாவை தமிழ் மக்கள் தங்களது அரசியல் தீர்வுக்காக அணுக வேண்டும் என சமர்ப்பணம் ஒன்றை அரசியல் கட்சிகளின் ஆதரவோடு கையளிப்பதற்காக தயாரிக்க முனைப்புக்கள் எடுக்கப்பட்டபோது, அரசியல் கட்சிகளின் இப்படியான போக்குகளாலும் இந்தியாவிடம் போவதா, போனால் என்ன கேட்கப்பட வேண்டும் என்ற வாதங்களாலும் முட்டுக்கட்டைகள் வந்தன. அந்த முனைப்பு 13 ஆம் திருத்தத்தை அமுல்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தில் இப்பொது சர்ச்சைக்கு உள்ளாக்கப்படுவதுபோல் அதைக் கேட்பதற்காக மட்டும் எனத் தொடங்கப்படவில்லை. தொப்புள்கொடி உறவாக தமிழ் மக்கள் இந்தியாவோடு நேச உறவை வளர்த்துக் கொள்ள வேண்டும், தமிழ் மக்களை அந்தப் பாதையில் செல்ல அவர்களுக்கு இருக்கும் தயக்கங்களை நீக்கி, வழிகள் ஏற்படுத்தி, ஒப்பந்த காலத்தில் இருந்து நடந்தவற்றை சமர்ப்பித்து, ஒரு நிரந்தரத் தீர்வைக் காணவேண்டும் என்பதுதான் அச்சிந்தனைகளில் இருந்தது. பின்னால் அந்த முறையிலேயே சமர்ப்பணமும் நடுவத்தால் கையளிக்கப்பட்டது. அதனை யாவரும் ஒத்து சமர்ப்பித்திருந்தால் அவை ஆளுமையாக அழுத்தமாக அமைந்திருக்கும். 13 ஐத் தான் கேட்கிறார்கள், ஒற்றையாட்சிக்குள் தான் தீர்வு என்று திருவிழக்கள் நடத்த சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்காது.

**690.விடுதலைப் புலிகள் 13 ஆம் திருத்தத்தில் அமைந்த மாகாண சபைகளை ஏற்று அமுல்படுத்த இணங்கியிருப்பார்களா?**

விடுதலைப் புலிகள் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தையோ, மாகாண சபைகளையோ, அதில் அமைந்த அதிகாரங்களையோ நிரந்தரத் தீர்வாக ஏற்கவில்லை. தமிழ் ஈழம் என்ற அபிலாகைக்கும் அவர்களது அதிகாரங்களுக்கும் குறுக்காக



வந்த இந்திய அனுமானைக் கட்டுப்படுத்துவதில் அல்லது வெளியேற்றுவதில்தான் அவர்களது வியூகங்கள் இருந்தன. அதற்காக சேராத இடம் சேர்ந்து செஞ்சோற்றுக் கடன் தீர்க்க வெளிக்கிட்டு சிங்கள பெரும்பான்மை விரித்த வலைகளில் வீழ்ந்து தத்தளித்தார்கள். பிரேமதாஸாவும் விடுதலைப் புலிகளும் இணைந்து இந்தியப் படைகளை வெளியேற்ற, அதற்கு இந்திய பிரதமர் வி.பி.சிங் இணங்கியிருந்த நேரங்களில், அவர் பாலசிங்கத்துக்கு விடுதலைப் புலிகளை 13 ஆம் திருத்தத்தை ஆட்சிப்படுத்துமாறும், அதனை ஈ.பி.ஆர்.எல்.எவ் வுடன் சேர்ந்து நடத்துமாறும் அறிவுறுத்தினார். அதற்கான சமரசங்களில் ஈடுபட்டு உதவிகள் தருமாறும் தமிழ்நாட்டு முதல்வர் கருணாநிதியைக் கேட்டுக் கொண்டதற்கு இணங்க அவரும் முயற்சிகள் எடுத்தார். விடுதலைப் புலிகளில் மாகாண சபைத் தேர்தல்களில் இறங்க மாத்தையாவின் தலைமையில் புதிய அரசியல் கட்சியைத் தோற்றுவிக்க, அதனைப் பிரேமதாஸா உடனடியாகப் பதிவாக்கி, அவர்களின் கைகளில் கொடுத்தார். இடையில் தொடர்ந்தும் ஈ.பி.ஆர்.எல்.எவ். உறுப்பினர்கள் தாக்கப்பட்டதால் அவர்களில் அதிகமானோர் இந்தியப் படைகளின் பாதுகாப்பில் வெளியேற முடிவு செய்ய, இந்திய அரசு மாகாண சபையின் முதலமைச்சர் வரதராஜப்பெருமாளுக்கு அதனைக் கலைத்து விட



அறிவுறுத்தல் தந்தது. அந்த அறிவுறுத்தல் பற்றி பேசுவதற்கு இந்தியத் தூதரகத்தில் இருந்து இன்றைய வெளிவிவகார மந்திரி ஜெய்சங்கர்தான் சென்றார். ஆனாலும் அறிவுறுத்தல்களுக்கு மாறாக வரதராஜப்பெருமாள் 1 மார்ச் 1989 இல் வடக்கு, கிழக்கு மாகாண சபையை குடியரசு யாப்புக்கான அரசமைப்புச் சபையாக மாற்றி, 'ஜனநாயகத் தமிழீழக் குடியரசு' என்ற சுதந்திரத் தமிழீழமாகப் பிரகடனப்படுத்தும் தீர்மானத்தை அறிவித்தார். இது பிரேமதாஸாவையும் பேரினவாதிகளையும் ஆத்திரப்படுத்தினாலும், இந்தியப் படைகள் வெளியேற வேண்டுமென்பதற்காக வரதராஜப்பெருமாளுக்கு எதிராக நடவடிக்கை ஏதும் எடுக்காது தந்திரத்தால் பொறுமை காத்தார் பிரேமதாஸா. வரக்கூடிய நிலையறிந்து வரதராஜப் பெருமாளும் வெளியேறினார். ஆகவே இடைக்காலத் தீர்வாக 13 ஆம் திருத்தத்தை அமுல்படுத்த, மாகாணசபைகளை நிர்வகிக்க, விடுதலைப் புலிகள் ஏற்றுக்கொண்டு மேல் நடவடிக்கைகள் எடுத்தனர். ஆனால் அவர்களது முழுமையான ஏகோபித்த தலைமைக் கட்டுப்பாட்டில் அது இருக்க வேண்டும் என்ற உறுதியும் இருந்தது. ஆகவே தற்பொழுது 35 வருடங்களின் பின்னாலானாலும் அதை இடைத்தீர்வாக ஏற்று நடைமுறைப்படுத்த பிரபாகரனின் வாரிசுகளாகத் தம்மைப் பிரபலப்படுத்திக் கொள்ளும் கஜேந்திரர்கள் ஏன் மாற்றுக் கதைகள் சொல்ல வேண்டும்? அதுதான் அவர்கள் அரசியலே. அவற்றைப் பின்னர் பார்க்கலாம்.



# இஸ்லாமாபாத் வீட்டுத் திட்ட கழிவு நீர் விவகாரம்: கல்முனை பிரதேச செயலகத்தை மூடி ஆர்ப்பாட்டம்!



அம்பாறை மாவட்டத்தின் கல்முனை பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட இஸ்லாமாபாத் குடியிருப்பு வீட்டுத் திட்டத்திவிருந்து வெளியேறும் கழிவு நீரால் தாம் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளனர் எனக் குற்றஞ்சாட்டிய அப்பிரதேச மக்கள் நேற்று ( புதன்கிழமை) கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கல்முனை சுபத்திராம விஹாரைக்கு முன்பாக ஒன்று கூடிய மக்கள் அங்கிருந்து சுலோகங்களை ஏந்தியவாறு பேரணியாகக் கல்முனை பிரதேச செயலகத்தை வந்தடைந்ததனர்.

இதனையடுத்து பிரதேச செயலகத்தின் கதவை மூடி, வழிமறித்து தமது சுகாதாரப் பிரச்சினைக்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாகத் தீர்வை வழங்க வேண்டும் எனக் கோரி குறித்த இடத்தில் அமர்ந்திருந்தனர். ‘கழிவு நீரை வைத்து அரசியல் செய்யாதீர்’, ‘மக்களின் சுகாதாரப் பிரச்சினைக்குத் தீர்வு வேண்டும்’, ‘முறையான கழிவகற்றல் செய்யப்படவேண்டும்’, ‘மாநகர சபை மௌனம் காப்பது ஏன்?’ போன்ற சுலோகங்களை ஏந்தி பொதுமக்கள் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனையடுத்து குறித்த பகுதிக்கு வருகை தந்த கல்முனை பிரதேச செயலாளர் ஜே. லியாக்கத் அலி பாதிக்கப்பட்ட மக்களுடன் கலந்துரையாடி சுமுகமான தீர்வை எட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. எனினும் பொதுமக்கள் அங்கிருந்து செல்லவில்லை.

மாநகர சபை முதல்வர், சுகாதார தரப்பினர் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் சம்பவ இடத்துக்கு வருகை தந்து மக்களின் பிரச்சினைக்கு உடனடியாகத் தீர்வு வழங்க வேண்டும் எனக் கோரிக்கை விடுத்தனர்.

பின்னர் ஆர்ப்பாட்டம் இடம்பெற்ற இடத்துக்கு கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஐ.எல்.எம்.றிபாஸ், கல்முனை மாநகர சபையின் பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் அர்சாத் காரியப்பர், பிரதேச செயலாளர் ஜெ.லியாக்கத் அலி, கல்முனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம் .ரம்சின் பக்கீர், கல்முனை தெற்கு மற்றும் வடக்கு சுகாதார வைத்திய அதிகாரிகள், நகர அபிவிருத்தி அதிகார சபையின் உத்தியோகத்தர்கள், சிரேஷ்ட பொதுச் சுகாதார பரிசோதகர்கள் அடங்கிய குழுவினர் ஆர்ப்பாட்டக்காரர்களுடன் சுமுகமான பேச்சில் ஈடுபட்டனர்.

இதன்போது குறித்த கழிவுநீரை உடனடியாகக் கல்முனை மாநகர சபையின் உதவியைக் கொண்டு அப்புறப்படுத்துவது எனவும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை நாடி நிரந்தரத் தீர்வைப் பெற்றுத் தருவதாகவும் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு உறுதியளித்தனர். எனினும் ஆர்ப்பாட்டக்காரர்கள் குறித்த வாக்குறுதியை ஏற்றுக்கொள்ளவில்லை தமது பிரச்சினைக்கு உடனடியாகத் தீர்வு வழங்க வேண்டும் எனக் கோரி ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.

இந்த கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம் காரணமாக பிரதேச செயலக வளாகத்துக்குள் அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் செல்ல முடியாமல் ஸ்தம்பிதம் அடைந்து காணப்பட்டதுடன் குறித்த வீதியூடாக போக்குவரத்தும் தடைப்பட்டு காணப்பட்டன.

கல்முனை மாநகர சபை உறுப்பினர் சந்திரசேகரன் ராஜன், கல்முனை ஸ்ரீ சுபத்திரா விகாராதிபதி ரன்முதுகல தேரர் மற்றும் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு பொதுமக்கள் நீண்டகாலமாக எதிர்நோக்கும் இந்தப் பிரச்சினை தொடர்பில் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்துக்களை வெளியிட்டனர்.

## தேங்காயை 75 ரூபாவுக்கு வருடம் முழுவதும் பெறலாம்!

### சதொசாவில் என்கிறார் வர்த்தக அமைச்சர்

இந்த வருடம் முழுவதும் 75 ரூபா என்ற நிலையான விலைக்கு சதோச வலைப்பின்னல் மூலம் நுகர்வோர் தேங்காயை பெற்றுக்கொள்ள முடியும் என்று வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

ஊடக சந்திப்பில் அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

நாட்டில் தேங்காயின் விலை அதிகரித்து வருவதை அடுத்து நுகர்வோர் நியாயமான விலையில் அதனைப் பெற்றக்கொள்ளும் நோக்கில் பெருந்தோட்டத்துறை அமைச்சு மற்றும் தெங்கு ஆய்வு நிறுவகத்தால் வர்த்தக அமைச்சு மற்றும் லங்கா சதொச விற்பனை வலைப்பின்னலுடன் இது தொடர்பாக உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டுள்ளது.

## மட்டு. ஊறணி சந்தியில் விபத்து; ஒருவர் காயம்!

மட்டக்களப்பு கொழும்பு வீதி ஊறணி சந்தியில் மோட்டார் சைக்கிள் ஒன்றும் கோழிகளை ஏற்றிச் சென்ற கன்ரர் ரக வாகனம் ஒன்றும் மோதிய விபத்தில் மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்ற பெண் ஒருவர் படுகாயமடைந்தமையுடன் வாகனம் தடம்புரண்ட சம்பவம் நேற்று (புதன்கிழமை) அதிகாலையில் இடம்பெற்றது. இதில் படுகாயமடைந்த பெண் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டமையுடன் சாரதியைக் கைது செய்துள்ளனர் என மட்டு தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர்.

வாழைச்சேனை பகுதியில் இருந்து காத்தான்குடி பிரதேசத்தை நோக்கி கோழிகளை ஏற்றிக் கொண்டு பிரயாணித்த கன்ரர் ரக வாகனம், மட்டக்களப்பில் இருந்து சம்பவதினமான நேற்று அதிகாலை 5 மணியளவில் ஊறணிக்கு மோட்டர்சைக்கிளை செலுத்தி சென்ற பெண்ணுடன் ஊறணி சந்தியில் மோதி விபத்துக்குள்ளானதில் அந்தப் பெண் படுகாயமடைந்த நிலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டார்.



அதேவேளை சுமார் 50 மீற்றர் தூரம்வரை மோட்டர் சைக்கிளை இழுத்துச் சென்ற நிலையில் கன்ரர் வாகனம் வீதியைவிட்டு விலகி தடம்புரண்டுள்ளது. கன்ரர் ரக வாகன சாரதியைக் தாம் கைது செய்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மட்டு. தலைமையகப் போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.

## மருத்துவ மாணவர்மீது தாக்கு ஆறுபேர் இதுவரை கைதாகினர்

களனி பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர்கள் நால்வர் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பில் நேற்று (புதன்கிழமை) இடம்பெற்ற ஊடக சந்திப்பில் சிரேஷ்ட பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் றோஹண இதனைத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை மாணவர்கள் மீதான தாக்குதல் தொடர் பாக விரிவான விசாரணைகளை மேற்கொள்ளுமாறும் பொது பாதுகாப்பு அமைச்சு அறிவுறுத்தியுள்ளது.

பொதுப் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர பொலிஸ் மா அதிபருக்கு குறித்த பணிப்புரையை விடுத்துள்ளார்.

## பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தடுத்துவைக்கப்பட்ட 8 பேர் விடுதலை

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்ட 9 கைதிகளை விடுவிக்க கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

9 சந்தேக நபர்களும் தலா 50 லட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளில் விடுவிக்கப்பட்டனர்.

சந்தேகநபர்கள் கொழும்பு மெகசின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் என சிறைச்சாலைகள் பேச்சாளர் சந்தன ஏகநாயக்க தெரிவித்தார்.

பிணை நிபந்தனைகளை நிறைவேற்றத் தவறியதால் கைதிகள் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என சிறைச்சாலைப் பேச்சாளர் தெரிவித்தார்.

## மட்டு.இந்துக் கல்லூரியின் 76 ஆவது ஆண்டு நிகழ்வு



மட்டக்களப்பு இந்துக் கல்லூரி (தேசிய பாடசாலை) யின் 76 ஆவது ஆண்டு தின நிகழ்வுகள் செவ்வாய்க்கிழமை பாடசாலை அதிபர் இரா.சண்டேஸ்வரன் தலைமையில் சுகாதார விதிமுறைகளை பின்பற்றி நடைபெற்றது.

1946 ஆண்டு பெப்ரவரி முதலாம் திகதி அப்போது அரசாங்க சபையின் பிரதிநிதியாக இருந்த அமரர் நல்லையாவால் ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பாடசாலை கடந்த ஆண்டு பவள விழாவை கொண்டாடியிருந்த நிலையில் அதே ஆண்டு தேசிய பாடசாலையாகவும் தரமுயர்த்தப்பட்டிருந்தது.

இதன்படி மட்டக்களப்பு இந்துக் கல்லூரி (தேசிய பாடசாலை) யின் 76ஆவது ஆண்டு தின நிகழ்வு நேற்று (புதன்கிழமை) காலை அதிதிகள் வரவேற்பு, கொடியேற்றுதல், பாடசாலையின் ஸ்தாபகர் நல்லையாவின் உருவச்சிலைக்கு மலர்மாலை அணிவித்தல் போன்ற நிகழ்வுகள் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் பாடசாலையின் ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கப் பிரதிநிதிகள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

அதனைத் தொடர்ந்து கல்லூரியின் பழைய மாணவர்களின் நிதிப் பங்களிப்பில் சத்துருகொண்டான் ‘ஓசாணம்’ சிறுவர் இல்லத்துக்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்களும் வழங்கி வைக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# நாட்டை மீண்டும் முடக்கினால் மக்கள் பட்டினியால் மரணிப்பர்!

## எச்சரிக்கிறார் உபுல் றோஹண



நாட்டை மீண்டும் முடக்கினால் மக்கள் பட்டினியால் மரணிக்க நேரிடும் என பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் றோஹண தெரிவித்துள்ளார்.

சிங்கள ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

முடக்க நிலை என்பது உலக அளவில் தோல்வியடைந்த ஒரு செயன்முறை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். நாடு தற்பொழுதுள்ள நிலையில் முடக்க நிலை அமுல்படுத்துவது நடைமுறைச் சாத்தியமற்றது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

முன்களப் பணியாளர்கள் என்ற ரீதியில் முடக்க நிலையை மீளவும் அறிவித்தால் கொவிட் பெருந்தொற்றால் மரணிப்போரின் எண்ணிக்கையை விடவும் பட்டினியால் மரணிப்போர் எண்ணிக்கை அதிகரிக்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார். நாட்டை இயல்பு நிலையில் முன்னெடுத்துச் செல்வதற்கான பொறுப்பு அனைவரையும் சார்ந்தது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## தொற்றாளரால் நிரம்பி வழிகிறது ஐ.டி.எச். வைத்தியசாலை!

கொவிட் தொற்றாளர்களால் ஐ.டி.எச். வைத்தியசாலை நிரம்பி வழிகிறது எனத் தகவல் வெளியாகியுள்ளது.

அங்கொட தொற்று நோய் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் கொவிட் நோயாளர்களின் எண்ணிக்கை 150 ஆக அதிகரித்துள்ளது என அதன் பணிப்பாளர் வைத்தியர் ஹசித அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

கொவிட் தொற்றாளர்களுக்கு மேலதிகமாக 30 டெங்கு நோயாளர்களும் அங்கு சேர்க்கப்பட்டுள்ளனர் என அவர் குறிப்பிட்டுள்ளார். நாடு முழுவதும் கொவிட் தொற்று வேகமாகப் பரவி வருவதால் நோயாளிகளின் எண்ணிக்கை மேலும் வேகமாக அதிகரிக்க வாய்ப்புள்ளது என அவர் கூறியுள்ளார்.

இந்த நிலையில் ஒக்ஸிஜன் தேவைப்படும் பல நோயாளிகளும் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## இந்தியாவிடம் இருந்து இலங்கைக்கு 50கோடி அமெ. டொலர் கடனுதவி!

இந்தியாவிடம் இருந்து 50 கோடி ரூபா அமெரிக்க டொலர்கள் கடனுதவி பெறப்படவுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதனுடன் தொடர்புடைய ஒப்பந்தம் நேற்று (புதன்கிழமை) மாலை கைச்சாத்திடப்பட்டது எனத் தெரிவிக்கப்படுகிறது.

பெற்றோலிய பொருள்கள் கொள்வனவுக்காக இந்த நிதியுதவி பெறப்படவுள்ளது எனக் கூறப்படுகிறது.

## திருட்டுக்களில் ஈடுபட்ட இருவருக்கு 15 ஆம் திகதிவரை விளக்க மறியல்!

திருகோணமலை தலைமையக பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளில் 22 லட்சத்து 52 ஆயிரத்து 140 ரூபா பணத்தைத் திருடிய குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட இருவரை எதிர்வரும் 15 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு திருகோணமலை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

திருகோணமலை நீதிமன்ற நீதிவான் பயாஸ் ரசாக் முன்னிலையில் மூன்று சந்தேக நபர்களை முன்னிலைப்படுத் திய போது அதில் இருவரை விளக்கமறியலில் வைக்குமாறும் மற்றுமொரு பெண்ணொருவரை மூன்று லட்சம் ரூபா சரீர பிணையில் செல்லுமாறும் நீதிவான் கட்டளையிட்டார்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் திருகோணமலை சிவன் கோயில் மற்றும் ஆனந்தபுரி பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனவும் தெரியவருகின்றது.

கடந்த ஜனவரி மாதம் 26 ஆம் திகதி திருகோணமலை தலைமைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் மோட்டார் சைக்கிளை நிறுத்திவிட்டுச் சென்ற போது மோட்டார் சைக்கிளில் இருந்து 22 லட்சத்து 52 ஆயிரத்து 140 ரூபா பணம் திருடப்பட்டுள்ளது எனப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையில் குறித்த விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் சந்தேகத்தின் பேரில் இரண்டு ஆண்கள் பெண் ஒருவர் உட்பட மூவரைக் கைது செய்து விசாரணைகளை மேற்கொண்ட போது அவர்களிடமிருந்து ஒரு லட்சத்து 89 ஆயிரத்து 300 ரூபா பணம் பெறப்பட்டது எனவும் தெரியவருகின்றது.

இதனை அடுத்து திருட்டு தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களை திருகோணமலை நீதிவான் முன்னிலையில் ஆஜர் படுத்திய போதே இந்தக் கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

## கொவிட்டுக்கு 470 கோடி ரூபா பணம் தொடர்பில் சமுர்த்தி விளக்கம் அளிப்பு

கொவிட் தொற்றால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட்ட 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவுக்கான சமுர்த்தி நிதியை மீள நிரப்பத் திறைசேரி தவறியுள்ளது எனத் தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுகள் பொய்யானது என சமுர்த்தி அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

5 ஆயிரம் ரூபா கொடுப்பனவுக்காக 470 கோடி ரூபா செலவழித்த சம்பவம் தொடர்பில் எழுந்துள்ள குற்றச்சாட்டுகளுக்குப் பதிலளித்த சமுர்த்தி பணிப்பாளர் நாயகம் பந்துல திலகசிறி இதனைத் தெரிவித்தார். இந்த பணத்தை தவணை முறையில் செலுத்துவதற்கு திறைசேரி நடவடிக்கை எடுத்துள்ளதாக அவர் இதன்போது தெரிவித்தார்.

கடந்த வருடம் டிசெம்பர் மாத இறுதிக்குள் சமுர்த்தி அபிவிருத்தி அதிகார சபைக்கு ஏறத்தாழ 80 கோடி ரூபா செலுத்தப்பட்டுள்ளது என அவர் கூறினார்.

இந்த வருடமும் தவணை முறையில் பணத்தை செலுத்துவதற்கான வழிமுறை ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது என சமுர்த்தி பணிப்பாளர் நாயகம் பந்துல திலகசிறி மேலும் தெரிவித்தார்.

## நாட்டில் தேர்தல்களை ஒத்திவைக்க முடியாது!



தேர்தல்களை ஒத்தி வைக்கக் கூடாது என விளையாட்டுத் துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் ஊடகவியலாளர்களிடம் கருத்து வெளியிடுகையில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு –

தேர்தல்களை ஒத்தி வைப்பது எந்த வகையிலும் செய்யக் கூடாது. தற்போதைய கொவிட் பெருந்தொற்று நிலைமைகளால் முதல் தடவையாக தேர்தல்கள் ஒத்தி வைக்கப்படவில்லை.

நாடாளுமன்றத் தேர்தல் எட்டு மாதங்கள் ஒத்தி வைக்கப்பட்டது. எனினும், அரசியல் காரணிகளுக்காக நாம் ஒரு போதும் தேர்தல்களை ஒத்தி வைக்கப் போவதில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி, ஐக்கிய மக்கள் சக்தி உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் தேர்தல்களை நடத்துமாறு அரசாங்கத்தை வலியுறுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## கொரோனா தொற்றில் இருந்து மேலும் 471 பேர் குணமடைவு

கொரோனா வைரஸ் தொற்றில் இருந்து மேலும் 471 பேர் குணமடைந்து நேற்று (புதன்கிழமை) வீடுகளுக்குத் திரும்பியுள்ளனர்.

இதனையடுத்து, நாட்டில் கொரோனா தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 5 லட்சத்து 79 ஆயிரத்து 320 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, நாட்டில் கொரோனாத் தொற்றுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை 6 லட்சத்து 12 ஆயிரத்து 322 ஆக அதிகரித்துள்ளது.

மேலும் இலங்கையில் இது வரை பதிவான மொத்த கொரோனா மரணங்களின் எண்ணிக்கை 15 ஆயிரத்து 473 ஆகப் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கிழக்கு அமைச்சுச் செயலர்களுக்கும் அதிரடி இடமாற்ற கடிதங்கள்!



கிழக்கு மாகாண அமைச்சுக்களின் செயலாளர்களுக்கான இடமாற்ற கடிதங்கள் கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யகம்பத்தால் வழங்கி வைக்கப்பட்டன.

இந்த இடமாற்றம் எதிர்வரும் 07 ஆம் திகதி நடைமுறைப்படுத்தப்படவுள்ளது எனவும் தெரியவருகின்றது. இதனடிப்படையில் ஐ.கே.ஜீ. முத்துபண்டா கிழக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலாளராக ஏ.எச்.எம்.அன்ஸார் வீதி அபிவிருத்தி அமைச்சின் செயலாளராகவும், பீ.கலாமதி முதலமைச்சு செயலாளராகவும் ஜே.ஜே. முரளிதரன் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளராக எச்.ஈ.எம்.டபிள்யூ.ஜீ.திஸாநாயக்காவும். கிழக்கு மாகாண பேரவையின் செயலாளராக எம்.வை.சலீமும் நியமிக்கப்பட்டுள்ளார். மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு எம்.கோபாலரத்னம் பிரதி பிரதம செயலாளர் (ஆளணி மற்றும் பயிற்சி) ஆர்.யூ.ஜலீல், பிரதி பிரதம செயலாளர் (நிர்வாகம்) மன்சூர் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

## காதலியைப் பார்க்கச் சென்ற காதலன் மீது கொடூரத் தாக்குதல்!

கலேவல – வீரகலவத்த பகுதியில் காதலித்த யுவதியைப் பார்க்கச் சென்ற இளைஞரொருவர் மீது யுவதியின் உறவினர்களால் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது எனக் கலேவல பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

கடந்த 28 ஆம் திகதி ஹொரவ்பொத்தானை பிரதேசத்திலிருந்து இரண்டு வருடமாக பழகிய யுவதி வீட்டுக்கு வருமாறு அழைப்பு விடுத்ததையடுத்து பார்வையிட சக நண்பருடன் மோட்டார் சைக்கிளில் சென்றபோது அங்கு யுவதியின் உறவினர்களால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது எனவும் தனது தலை முடியை வெட்டி தனக்கு காயம் ஏற்படுத்தினர் எனவும் தெரிவித்து ஹொரவ் பொத்தானை பிரதேச வைத்தியசாலையில் காதலன் சேர்க்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு தாக்குதலுக்கு உள்ளானவர் ஹொரவ்பொத்தானை – நிக்கவெள பகுதியைச் சேர்ந்த கபூர் முகம்மட் சாகீர் (வயது – 19) எனவும் தெரியவருகின்றது.

இதேவேளை, தாக்குதல் நடத்தியவர் அந்தப் பெண்ணின் தந்தை எனவும் அவருடன் பக்கத்து வீட்டார் இருவரும் சேர்ந்து தன்னைத் தாக்கினர் எனவும் பாதிக்கப்பட்ட இளைஞர் தெரிவித்தார்.

இது தொடர்பில் தாக்குதல் நடத்திய யுவதியின் தந்தையைத் தொடர்புகொண்டு கேட்டபோது இரவு நேரத்தில் தனது வீட்டுக்கு வந்து கதவைத் தட்டினார் எனவும் இதனாலேயே தாக்கினேன் எனவும் அவர் குறிப்பிட்டார் என பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்தத் தாக்குதலால் பாதிக்கப்பட்ட இளைஞர் ஹொரவப்பொத்தானை வைத்தியசாலையில் இருந்து மேலதிக சிகிச்சைக்காக அநுராதபுர போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட உள்ளார் எனவும் வைத்தியசாலையின் பேச்சாளரொருவர் தெரிவித்தார்.

காலைக்கதிர் Kalaikkathir

## திருமலை ஸ்ரீ சண்முகா இந்துவில் மீண்டும் 'ஹபாயா' சர்ச்சை

# அதிபரைத் தாக்கிய ஆசிரியை; மாணவர்கள் பெரும் போராட்டம்

## கிழக்கு கல்வித் திணைக்களம் தீவிர விசாரணை

**ஆசிரியரால் தாக்கப்பட்டு மயக்கமுற்ற நிலையில் திருகோணமலை ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி அதிபர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் பெற்றோர்கள் இணைந்து கல்லூரிக்கு முன்னால் போராட்டத்தில் ஈடுபட்டனர்.**



இந்தச் சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது,

திருகோணமலையிலுள்ள பிரபல பெண்கள் பாடசாலையான ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரியில் சில வருடங்களுக்கு முன் ஹபாயா விவகாரம் தொடர்பில் பிரச்சினை எழுந்த நிலையில் நேற்று மீண்டும் அவ்விவகாரம் மாணவர்கள் - ஆசிரியர்கள் - பெற்றோர் மத்தியில் பூதாகரமாக மாறியுள்ளது.

நேற்று ஓர் ஆசிரியை முகத்தை முழுவதுமாக மறைத்து 'ஹபாயா' அணிந்து பாடசாலைக்கு வந்த நிலையில் மாணவர்கள் இதை எதிர்த்து வெளிநடப்புச் செய்தனர்.

இதைக் குறித்த ஆசிரியை காணொளிப் பதிவு செய்தார். இந்த நடவடிக்கையைத் தடுக்க அதிபர் தலையீடு செய்த போது அவரைக் குறித்த ஆசிரியை தள்ளிவிட்டார். கீழே விழுந்து மயக்கமடைந்த அதிபர் திருகோணமலை பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

ஆசிரியையின் இந்தச் செயற்பாட்டுக்கு எதிராக மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் பெற்றோர்கள் இணைந்து கல்லூரிக்கு முன்னால் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த விடயம் தொடர்பில் கிழக்கு மாகாண கல்வித் திணைக்களம் மற்றும் பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

---

## இரண்டு மாதங்களுக்குள் தீர்வு இல்லையேல் அரசுக்கு ஆபத்து

### அமைச்சர் கம்மன்பில



சமூக மட்டத்தில் தற்போது தோற்றம் பெற்றுள்ள பிரச்சினைகளுக்கு இன்னும் இரு மாதங்களுக்குள் தீர்வு காணாவிடின் அது அரசின் இருப்புக்கு ஆபத்து மிக்கதாக அமையும்.

- இவ்வாறு வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார். இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வலுசக்தி துறை அமைச்சு இலங்கை மின்சார சபைக்கு எரிபொருள் விநியோ கிப்பதை இடைநிறுத்தியுள்ளதால் நாடு தழுவிய ரீதியில் மின்விநியோகத்தைத் துண்டிக்க நேரிடும் என இலங்கை மின்சார சபை குறிப்பிட்டதன் பின்னரே மின்னுற்பத்தித் துறையில் மின்சார சபை முன்னெடுக்காத பல விடயங்களை வலு சக்தி அமைச்சு பகிரங்கப்படுத்தியது.

தேசிய மின்விநியோகக் கட்டமைப் பில் தற்போது தோற்றம் பெற்றுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் யோசனையை நிதி அமைச்சர் பஸில் ராஜபக் ஷவிடமும், மின்சாரத்துறை அமைச்சர் காமினி லொக் குகேவிடமும் வலுசக்தி அமைச்சர் என்ற ரீதியில் குறிப் பிட்டுள்ளேன்.

மின்விநியோகக் கட்டமைப்பில் தோற்றம் பெற்றுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு நீண்ட கால கொள்கையை அடிப்படையாகக் கொண்ட திட்டங்கள் வகுக்கப்பட வேண்டும்.

நெருக்கடியான நிலையின்போது மாத்தி ரம் தீர்வு காணும் திட்டங்களைச் செயற்படுத்துவதை மின்சார சபை தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

சுபீட்சமான எதிர்கால கொள்கைக்க மைய அரசு செயற்படுகின்றதா என்பது சந்தேகத்துக்குரியது. கொழும்புத் துறை முகத்தின் கிழக்கு முனையத்தை இந்திய நிறு வனத்துக்கு வழங்கல், யுகதனவி மின் நிலையத்தின் பங்குகளை அமெரிக்க நிறுவனத்துக்கு வழங்கும் தீர்மானம் ஆகியன சுபீட்சமான கொள்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பிடப்படவில்லை.

அரசு கொள்கைக்கு முரணாகச் செயற்படும்போது அதனைச் சுட்டிக்காட்டி அரசை நல்வழிப்படுத்தும் பொறுப்பு கூட்டணியில் உள்ள பங்காளிக் கட்சிகளுக்கு உண்டு. சமூக மட்டத்தில் தற்போது தோற் றம் பெற்றுள்ள பிரச்சினைகளுக்கு இன் னும் இரு மாத காலத்துக்குள் தீர்வு காணா விடின் அது அரசின் இருப்புக்கு ஆபத்து மிக்கமாக அமையும். - என்றார்.

---

## 'தம்பபவனி'யைப் பார்வையிட மன்னார் சென்றார் ஜனாதிபதி



(ந.லோகதயாளன்)

இலங்கை மின்சார சபைக்கு உரித்தான மன்னார் 'தம்பபவனி' காற்றாலை மின்னுற்பத்தி நிலையத்துக்கு, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்று முற்பகல் கண்காணிப்பு விஜயம் மேற்கொண்டார்.

மின்சாரத்தால் நாட்டைப் பலப்படுத்துதல், நிலையான மின் விநியோகம் மற்றும் அபிவிருத்தி வேலைத்திட்டங்களைத் துரிதப்படுத்துதல் போன்ற நோக்கங்களின் அடிப்படையில், 2014ஆம் ஆண்டில் இந்த 'தம்பபவனி' காற்றாலை மின்னுற்பத்தி நிலையத்தின் நிர்மாணப் பணிகளுக்கான திட்டங்கள் வகுக்கப்பட்டன.

இரண்டு பெரிய பருவக் காற்றுகளையும் எதிர்கொள்ளும் மன்னார் தீவின் தெற்குக் கடற்கரைப் பிரதேசத்தில், 13 கிலோமீற்றர் நீளம் மற்றும் 150 ஹெக்டெயார் நிலப்பரப்பு, இதற்காகத் தெரிவு செய்யப்பட்டது.

90 மீற்றர் உயரத்திலான விசையாழிகளுடன் கூடிய முப்பது கோபுரங்களை இந்த மின்னுற்பத்தி நிலையம் கொண்டுள்ளது. சுழலும் கத்திகளின் (காற்றாலைகள்) விட்டம் நூற்று இருபத்து ஆறு மீற்றர் ஆகும். ஒரு கோபுரத்திலிருந்து 3.45 மெகாவொட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகின்றது. நடுக்குடா பசுமை உதவி நிலையம் மற்றும் மன்னார் - புதுக்காமம் வரையான 36 கிலோமீற்றர் நீளத்துக்கு, இதன் ட்ரான்ஸ்மின் கட்டமைப்பு அமைந்துள்ளது.

இந்நிலையத்தின் மூலம் உற்பத்தி செய்யப்படும் மொத்த மின்னுற்பத்தியின் அளவு 103.5 மெகாவொட்கள் ஆகும். இங்கு ஓர் அலகு மின்னுற்பத்தியை மேற்கொள்ள, 8 ரூபாவுக்கும் குறைவான தொகையே செலவாகின்றது என இலங்கை மின்சார சபை அறிவித்துள்ளது.

மிகச் சிறந்த மின் விநியோகத்துக்காக, விசேட தொழில்நுட்ப முறைமைகள் மற்றும் சுற்றுச்சூழல் நட்புணர்வுடன் கூடிய இந்நாட்டின் மிகப் பெரிய காற்றாலை மின்னுற்பத்தி நிலையமான இது, மீள்புதுப்பிக்கத்தக்க சக்திவலுவை நோக்கிச் செல்லும் பயணத்தின் விசேடத்துவமிக்க மைல் கல்லாக விளங்குகின்றது.

தம்பபவனி காற்றாலை மின்னுற்பத்தி நிலையத்தின் ஊடாக, மேலும் 50 மெகாவொட் மின்சாரத்தை உற்பத்தி செய்து தேசிய மின் கட்டமைப்புடன் இணைப்பதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. அதன் முன்னேற்றம் தொடர்பில் கேட்டறிந்த ஜனாதிபதி, புதிய காற்றாலை மின்னுற்பத்தி நிலையங்களை அமைக்கக்கூடிய இடங்கள் தொடர்பான அறிக்கையொன்றை உடனடியாகத் தயாரிக்குமாறு, உரிய அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

காற்றாலை மின்னுற்பத்தி நிலையங்கள் ஊடாக உற்பத்தி செய்யப்பட்டு இதுவரையில் தேசிய மின் கட்டமைப்புக்கு இணைக்கப்படும் மின்சாரத்தின் அளவு 248 மெகாவொட்களாகும். குறுகிய காலத்துக்குள் அந்தளவை மேம்படுத்துவதற்கு உள்ள சாத்தியக்கூறுகள் தொடர்பில் கண்டறியும் நோக்கத்தில் இந்த மின்னுற்பத்தி நிலையத்துக்கு கண்காணிப்பு விஜயத்தை மேற்கொண்ட ஜனாதிபதி, அதிலுள்ள அனைத்துப் பிரிவுகளையும் பார்வையிட்டார்.

2030ஆம் ஆண்டாகும்போது, இந்நாட்டின் மொத்த மின்னுற்பத்தியில் 70 சதவீதத்தை மீள்புதுப்பிக்கத்தக்க சக்திவலுக்கள் ஊடாகப் பெற்றுக்கொள்வதே அரசின் நோக்கமாகும். சுற்றுச்சூழலுக்குப் பாதிப்பற்ற வகையில், குறைந்த விலையில் மின்னுற்பத்தியை மேம்படுத்துவதன் மூலம், எதிர்காலத்தில் நுகர்வோர் செலுத்தும் மின் கட்டணத்தின் அளவைக் குறைப்பதே இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

மின்சக்தி அமைச்சர் காமினி லொக்குகே, இராஜாங்க அமைச்சர் துமிந்த திஸாநாயக்க, ஜனாதிபதியின் தலைமை ஆலோசகர் லலித் வீரதுங்க, மின்சக்தி அமைச்சின் செயலாளர் வசந்தா பெரேரா, இராஜாங்க அமைச்சின் செயலாளர் கே.எச்.டீ.கே.சரகோன், மின்சார சபையின் உபதலைவர் நலிந்த இளங்கோன், பதில் பொது முகாமையாளர் ரொஹாந்த அபேசேகர உள்ளிட்ட அதிகாரிகள் பலரும் இந்தக் கண்காணிப்பு விஜயத்தில் இணைந்துகொண்டனர்.

---

## உயர்தரப் பரீட்சைக் காலப்பகுதியில் சகல பாடசாலைகளுக்கும் விடுமுறை

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை காலப்பகுதியில் அரச மற்றும் அரச அனுசரணை பெற்ற தனியார் பாடசாலைகளுக்கும் விடுமுறை வழங்கப்படவுள்ளது எனக் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

அதன்படி குறித்த பாடசாலைகளின் அனைத்து வகுப்புகளுக்கும் இவ்வாறு விடுமுறை வழங்கப்பட வுள்ளது.

அதற்கமைய, இம்மாதம் (பெப்ரவரி) 7ஆம் திகதி முதல் அடுத்த மாதம் (மார்ச்) 7ஆம் திகதி வரை விடுமுறை வழங்கப்படவுள்ளது எனக் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

# மன்னாரில் கடந்த 2 நாள்களில் 99 கொரோனா தொற்றாளர்கள்!

## சுகாதாரப் பணிப்பாளர் த.விநோதன் தகவல்



மன்னார் மாவட்டத்தில் கடந்த இரு தினங்களில் 99 கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் தி.விநோதன் தெரிவித்தார்.

மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நேற்று (புதன்கிழமை) காலை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

மன்னார் மாவட்டத்தில் கடந்த திங்கட்கிழமை 60 கொரோனா தொற்றாளர்களும், செவ்வாய்க்கிழமை 39 கொரோனாத் தொற்றாளர்கள் உள்ளடங்களாக கடந்த 2 தினங்களில் 99 கொரோனாத் தொற்றாளர்கள் அன்டிஜன் பரிசோதனை மூலம் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இந்த சடுதியான எண்ணிக்கை அதிகரிப்பு மன்னார் மாவட்டத்தில் ஒமிக்ரோன் தொற்று பரவல் ஏற்பட்டிருக்கக் கூடும் என்ற சந்தேகத்தை ஏற்படுத்தி இருப்பதால் பொதுமக்கள் விழிப்புடனும், அவதானத்துடனும் இருக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

மக்கள் சுகாதார வழி முறைகளைக் கடைப்பிடிப்பதோடு, மூன்றாவது அல்லது பூஸ்டர் தடுப்பூசிகளைப் பெற்றுக் கொள்ளாதவர்கள் உடனடியாகக் குறித்த தடுப்பூசிகளைக் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்.

2 ஆவது தடுப்பூசியைப் பெற்றுக் கொண்டு 3 மாதங்கள் கடந்த 20 வயதுக்கு மேற்பட்ட அனைவரும், மூன்றாவது அல்லது பூஸ்டர் தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.

இது வரையில் மன்னார் மாவட்டத்தில் 3 ஆயிரத்து 423 பேர் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர். 36 கொரோனா தொற்று மரணங்கள் மன்னார் மாவட்டத்தில் நிகழ்ந்துள்ளன.

இந்த வருடம் ஜனவரி 2 ஆம் திகதி கொரோனா மரணம் பதிவாகி உள்ளது. இந்த வருடம் தற்போது வரை 240 கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

பாடசாலைகளில் மாணவர்களுக்கு முதலாவது தடுப்பூசி வழங்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு நிறைவடைந்துள்ளது. மொத்தமாக 12 ஆயிரத்து 500 மாணவர்கள் குறித்த தடுப்பூசியைப் பெற்றுக் கொண்டுள்ளனர்.

தற்போது பூஸ்டர் தடுப்பூசி வழங்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. தற்போது வரை 24 ஆயிரத்து 300 இற்கும் மேற்பட்டவர்கள் குறித்த தடுப்பூசியை பெற்றுக் கொண்டுள்ளனர். ஆக, கூடுதலாக நானாட்டான் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 50.3 சதவீதமான 30 வயதிற்கு மேற்பட்டவர்கள் தமது பூஸ்டர் தடுப்பூசியைப் பெற்றுக் கொண்டுள்ளனர்.

மன்னார் மாவட்டத்தில் சராசரியாக இதுவரை 34 சதவீதமான 30 வயதுக்கு மேற்பட்டவர்கள் பூஸ்டர் தடுப்பூசியைப் பெற்றுக் கொண்டுள்ளனர்.

அதே வேளை மார்ச் மாதம் முதலாம் திகதி இடம் பெற உள்ள மகா சிவராத்திரி விழாவிற்காக மன்னார் திருக்கேதீஸ்வரத்துக்கு வருகை தர இருக்கும் பக்தர்கள் கட்டாயம் பூஸ்டர் தடுப்பூசியைப் பெற்று 2 வாரங்களாவது நிறைவடைந்து இருக்க வேண்டும்.

எனவே, எதிர்வரும் 12 ஆம் திகதிக்கு முன்னர் மன்னாரில் அல்லது தமது மாவட்டங்களில் பூஸ்டர் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ள முடியும்.

வேறு மாவட்டங்களில் இருந்து மன்னார் திருக்கேதீஸ்வரத்துக்கு வருகை தர உள்ளவர்கள். பூஸ்டர் தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்வதில் சிரமம் இருந்தால் மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையுடன் தொடர்புகொண்டால் இவர்களுக்கு விசேடமாகப் பூஸ்டர் தடுப்பூசியை வழங்க நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும். – என அவர் மேலும் தெரிவித்தார்.

## ஹிஸ்புல்லாவுக்குப் பிணை வழங்கும் முடிவு பெப்.7 இல்!



சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லாவுக்குப் பிணை வழங்குவது தொடர்பான தீர்ப்பு எதிர்வரும் 7 ஆம் திகதி அறிவிக்கப்படும் என மேன்முறையீட்டு நீதிமன்றம் அறிவித்துள்ளது.

நீதியரசர்களான மேனகா விஜேசுந்தர மற்றும் நீல் இத்தவெல ஆகியோர் முன்னிலையில் நேற்று (புதன்கிழமை) இந்த வழக்கு விசாரணைக்கு வந்தபோதே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சட்டத்தரணிக்கு பிணை வழங்க புத்தளம் மேல் நீதிமன்றம் கடந்த ஜனவரி மாதம் 28 ஆம் திகதி மறுப்பு வெளியிட்டது.

2020 ஆம் ஆண்டு ஏப்ரல் 14 அன்று, பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லா கைது செய்யப்பட்டார்.

ஈஸ்டர் தாக்குதலை நடத்தியவர்களுக்கு உதவி செய்தார் என்றும் சமூகங்களுக்கு இடையில் அமைதியின்மையைத் தோற்றுவித்தார் எனவும் தெரிவித்து அவர் கைது செய்யப்பட்டார்.

## இந்தியக் கடற்றொழிலாளரால் ஏற்பட்ட பாதிப்பு நட்டஈடு வழங்க அமைச்சர் டக்ளஸ் ஏற்பாடு

அத்துமீறி எல்லை தாண்டி வந்து சட்ட விரோத தொழில் முறைகளைப் பயன்படுத்துகின்ற இந்தியக் கடற்றொழிலாளர்களால் ஏற்படுத்தப்பட்ட பாதிப்புக்களுக்கும் உயிரிழந்த இரண்டு கடற்றொழிலாளர்களின் குடும்பத்தினருக்கும் நஷ்டஈடுகளை வழங்குவதற்கான விசேட அமைச்சரவை பத்திரம் சமர்ப்பிக்கப்படும் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

இந்தியக் கடற்றொழிலாளர்களின் அத்துமீறிய செயற்பாடுகளால் பாதிக்கப்பட்டுள்ள கடற்றொழிலாளர்கள் மருதங்கேணி பிரதேச செயலகத்தை வழி மறித்து போராட்டத்தில் ஈடுபட்ட நிலையில், குறித்த இடத்துக்குச் சென்று போராட்டத்தில் ஈடுபட்டவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடிய போதே, கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா –

உங்களின் உணர்வுகளைப் புரிந்து கொண்டு – இந்தியக் கடற்றொழிலாளர்களால் ஏற்படுத்தப்படும் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும் என்ற விருப்பதுடன் உங்கள் முன்னால் வந்திருக்கின்றேன். என்னுடைய கருத்துக்களில் இருக்கின்ற உண்மையைப் புரிந்துகொண்டு அணி திரள்வீர்களாயின் உங்களுடைய எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றித் தருவேன். – என்று தெரிவித்தார்.

அதேவேளை, பருத்தித்துறை முனை கடற்கரை பகுதியில் அத்துமீறி நுழைந்து சட்ட விரோத தொழில் முறையைப் பயன்படுத்தி மீன் பிடித்துக் கொண்டிருந்த இந்திய இழுவைவலைப் படகுகளை பிடிப்பதற்கு பிரதேச கடற்றொழிலாளர் முயற்சித்தமையால் ஏற்பட்ட பதற்றம், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் தலையீட்டால் கட்டுப்பாட்டினுள் கொண்டு வரப்பட்டது.

பருத்தித்துறை முனை கடல் பிரதேசத்தில் சுமார் ஒரு கடல் மைல் தொலைவில் செவ்வாய் இரவு இந்திய இழுவைவலைப் படகுகள் அவதனித்ததும் பொறுமை இழந்த பிரதேச கடற்றொழிலாளர்கள், அவற்றை துரத்திச் சென்று



கைப்பற்ற முயற்சித்தமையால் இரு தரப்பினருக்கும் இடையில் முறுகல் ஏற்பட்டது.

குறித்த விடயம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிற்கு தெரியப்படுத்தப்பட்ட நிலையில், உரிய இடத்துக்குச் சென்ற கடற்றொழில் அமைச்சர், சம்பவ இடத்துக்குச் கடற் படையினரை அனுப்பி வைத்தமையுடன், கடற்றொழிலாளர்களையும் ஆறுதல்படுத்தி கரைக்கு திருப்பி அழைத்தார்.

இந்நிலையில் கடற்படையினரால் இரண்டு இந்தியப் மீன்பிடிப் படகுகள் கைப்பற்றப்பட்டமையுடன் அதிலிருந்த 21 மீனவர்களும் கைது செய்யப்பட்டனர்.

ஏற்கனவே, கடந்த 27 ஆம் திகதி வத்திராயனில் இருந்து தொழிலுக்குச் சென்ற இரண்டு கடற்றொழிலாளர்களின் சடலங்கள் செவ்வாய்க்கிழமை கரையொதுங்கிய நிலையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்தியக் கடற்றொழிலாளர் விவகாரம் சுமுகமாகத் தீர்க்கப்படாது விட்டால் இரண்டு நாட்டு கடற்றொழிலார்களும் நடுக் கடலில் மோதும் நிலை ஏற்படும் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தொடர்ச்சியாகத் தெரிவித்து வந்ததுடன் பல்வேறு முயற்சிகளிலும் ஈடுபட்டு வந்த நிலையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது.

## மின்சார சபைக்கு ஒரு வாரத்திற்கு எரிபொருள் என கம்மன்பில உறுதி

கொழும்பு, பெப். 03

மின்சார சபையின் மின் உற்பத்தி நிலையங்களின் செயற்பாட்டுக்குத் தேவையான எரிபொருள் ஒரு வாரத்துக்கு வழங்கப்படும் என எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிற்கு அறிவித்துள்ளார்.

மின்சார சபைக்குத் தேவையான எரிபொருள் இன்று முதல் வழங்கப்படும் என்றும் இதனால் மின் உற்பத்தி நிலையங்களின் உற்பத்தி நடவடிக்கைகளுக்கு இடையூறு ஏற்படாது என்றும் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார்.

எனினும் நுரைச்சோலை, சப்புகஸ்கந்த, களனிதிஸ்ஸ மற்றும் கொழும்பில் உள்ள மின் உற்பத்தி நிலையமொன்றும் எரிபொருள் நெருக்கடி காரணமாக ஸ்தம்பிதமடைந்துள்ளது.

இதன்காரணமாக செவ்வாய்க்கிழமை நாடளாவிய ரீதியில் பல பகுதிகளில் முன்னறிவிப்பு இல்லாமல் மின்சாரம் துண்டிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 03.02.2022இல் வெளியிடப்பெற்றது.